விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 09 புதன்கிழமை (25.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 06

## அரசு வழங்கும் பாடல்களே பேருந்துகளில் ஒலிபரப்ப முடியும்

### ஜனவரி முதல் புதிய நடைமுறை

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பயணிகள் பேருந்துகளில் இசைக்கக்கூடிய பாடல்களின் தொகுப்பை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி அரச மற்றும் தனியார் பேருந்துகளில் சாரதிகள், நடத்துநர்கள் தமது விருப்பமான பாடல்களை ஒலிபரப்புவதற்கு

24

## வலி.மேற்குப் பிரதேச சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(அராலி)

மூளாய் பிள்ளையார் கோவிலின் அருகாமையிலுள்ள கிணற்றிலிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் மூளாய் ஜே/171ஆம் பிரிவைச் சேர்ந்த கந்தையா லெனின் (வயது-48) என்ற வலி. மேற்கு பிர

24

## விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கொடிகாமம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்

24




# ராஜித சேனாரத்னவை கைது செய்ய உத்தரவு

## சி.ஐ.டிக்கு பணித்தார் சட்டமா அதிபர்



(கொழும்பு) முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்னவை கைது செய்யுமாறு சட்டமா அதிபர், குற்ற விசாரணைப் பிரிவுக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கமைய அவரைக் கைது செய்வதற்கான பிடியாணை நீதிமன்றில் நேற்று மாலை பெறப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சட்டமா அதிபரின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் 10ஆம் திகதி, ராஜித சேனாரத்ன ஒழுங்கு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாக இரண்டு பேர் தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

அந்த விவகாரம் குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வரும், குற்ற

23

## கொழும்பு சிறையில் நேற்று இரவு துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

கொழும்பு மகசின் சிறையில் நேற்று இரவு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதி ஒருவர் தப்பியோட முயன்ற வேளையில் சிறைக்காவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம்

23

## சட்டவிரோத குழுக்களில் உள்ளோர் பொலிஸாரின் முகவராக செயற்படுகின்றனர்

### சட்டத்தரணிகள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள சட்டவிரோதக் குழுக்களில் உள்ளோர் பொலிஸாரின் முகவர்களாகச் செயற்படுவதோடு யாழ்.சிறைச்சாலையில் போதைப்பொருள் பாவனை இடம் பெறுவதாகச் சட்டத்தரணிகள் குற்றஞ் சாட்டினர்.

யாழ் மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற சட்ட விரோதக்குழுக்கள் தொடர்பான கலந்துரையாடலிலே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இடம்பெறும் சட்ட விரோத மணல் கடத்த

24

## தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் உயிரிழப்பு

### திருமணமாகி 4 மாதங்களில் சோகம்



தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சுயாகரன் சங்கீதா (வயது-33) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

24

## காய்ச்சல் காரணமாக ஒன்றரை மாத சிசு மரணம்

### இணுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக ஒன்றரை மாத சிசுவொன்று யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளது.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் இணுவில்

23

## கிளிநொச்சியில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக

24

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த 12 கிலோ கேரள கஞ்சா நடுக்கடலில் பறிமுதல்

(சென்னை)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 12 கிலோ கேரள கஞ்சா நடுக்கடலில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

23

## சட்டவிரோத செயல் யாழில் நிறுத்தப்படும்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் சேனாரட்ன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இன்றிலிருந்து பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதி

23

## ஐ.நா சவால்களை எதிர்கொள்ள இலங்கை அரசு தயாராகிறது

### இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் அமர்வுகளில் இலங்கை எதிர்கொள்ளக்கூடிய அனைத்து சவால்களை

24

# சிறிராம் ஜுவல்லர்ஸ்

பண்டிகையை முன்னிட்டு
தங்க ஆபரணங்களுக்கான
மாபெரும் விலைத் தள்ளுபடி

செய்கூலி, சேதாரம் இன்றி

1 பவுண் 22 கரட்
69500/=
மட்டுமே !

ஆபரணங்களுக்கான தரச்சான்றிதழ் வழங்கப்படும்.
இவ் விலைத் தள்ளுபடி இம் மாதம் மட்டுமே
(23 தொடக்கம் 31 வரை மட்டுமே) (8649)

ஒரு முறை வந்து பாருங்கள் ஒத்துக் கொள்வீர்கள்!

No:193, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் 077 165 1729

# மீண்டும் மானிப்பாயில் றஞ்சிற் மோட்டோர்ஸ்

HONDA

(றஞ்சிற் றிப்பியரிங் & சேவிஸ் சென்டர்)

நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

யாழ் மக்களுக்காக றஞ்சிற் மோட்டோர்ஸ் HONDA இணைந்து
வழங்கும் பண்டிகைக்கால மாபெரும் சலுகைகள்

01.12.2019 -15.01.2020 வரை எம்மிடம் மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்து குலுக்கல் முறையில் சோபா செற்றினை பெற்றிடும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

01.12.2012 முதல் கொண்டாவுடன் சேவை முகவராக இணைகின்றார்கள்
றஞ்சிற் மோட்டோர்ஸ் நிறுவனத்தினர்

## எமது சேவைகள்

- HONDA மோட்டார் சைக்கிள் விற்பனை
- HONDA அசல் உதிரிப்பாக விற்பனை
- HONDA சேவிஸ் & மெக்கானிக்
  (மோட்டார் சைக்கிள் விற்பனைக்குப் பிந்திய சிறப்பு சேவைகள், இலவச சேவைகள் மற்றும் உத்தரவாத சேவைகள்)

தொடர்புகளுக்கு:0773107549

## பண்டிகைக் கால சலுகைகள்

### காசு மூலமான சலுகைகள்

விலைக்கழிவு தெரிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 15,000/= வரை

- SLS தலைக்கவசம்
- காப்புறுதி (3ம் நபர் காப்புறுதி)
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்
- சிறப்பு பரிசில்கள்

### லீசிங் மூலம் விசேட சலுகைகள்

- SLS தலைக்கவசம்
- ஜக்கெற்
- காப்புறுதி
- பதிவுக்கட்டணம்
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்

சிறப்பு சலுகைகள் - எம்மிடம் பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளைப் பெற்றிடும் வசதி (நிபந்தனைக்குட்பட்டது)

RANJIT MOTORS
(RRSC Motors Engineers)
Sales & Parts : No- 311/A,Jaffna Road, manipay.
இல -311/A.யாழ் வீதி. மானிப்பாய். 0214927627,0212255228
Service & Parts: No-14, Suthumalai Road,manipay.
இல.14,சுதுமலை வீதி. மானிப்பாய். 0214927337,0212223111
Mobile:0773107549, 0768339898
E.Mail:rrscmanipay@gmail.com
F.Book:Honda Ranjit Motors
(8510)

# கிருபா லேணர்ஸ்
# KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
DS-589

அரச அங்கீகாரம் பெற்ற கனரக(A) தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 4353, 021 492 3200, 071 454 6960



விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
இரவு நேர வாகனப் பயிற்சி.
தவணை முறைக் கட்டணங்கள்.
சகல கிளைகளிலும் வாகனப் பயிற்சி.
விசேட பரீட்சை ஒழுங்குகள்.

No.1 Driving School

### யாழ்ப்பாணம்

- 227/6 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.(மதவடி அருகில்) 021 224 2022, 071 4546 956
- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 4546 961
- 36, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(கச்சேரி அருகில்) 021 222 66 99, 076 722 5292
- ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். 021 222 6688, 071 777 6969
- கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைச் சந்தி, தெல்லிப்பளை 021 224 3737, 071 4546 959
- கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அருகில்) 021 227 0700, 071 4546 957
- பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக) நெல்லியடி. 021 300 6550, 071 4546 958
- இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (பல்கலைக்கழகம் முன்) 021 221 4488, 077 722 7740
- காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி. 021 225 2500, 076 2121 299

### வவுனியா

- 216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777, 0777 100 444

### மன்னார்

- 94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732

### கிளிநொச்சி


- ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505, 071 4546 955
- புளியடிச் சந்தி, முல்லை வீதி, விசுவமடு 021 320 1515, 077 8585 263
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 070 333 6161
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818, 070 333 7171

(C-8651)

# ஆழிப்பேரலையில் அள்ளுண்டு போனவர்களுக்காக

# நினைவேந்தலுக்குத் தயாராகும் நினைவாலயம்





(பொற்பதி)

உடுத்துறை பொது சுனாமி நினைவாலயம் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்குத் தயாராகி வருகின்றது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது பல்லாயிரக்கணக்கானோர் உயிர்நீத்தனர்.

அவர்கள் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்ட உடுத்துறை சுனாமி நினைவு பொது சதுக்கத்தில் அமைந்துள்ள கல்லறைகளுக்கு வர்ணம் பூசுவதிலும் அந்த வளாகத்தை துப்புரவு செய்வதிலும் உயிர் நீத்தவர்களின் உறவினர்களும் பொதுமக்களும் ஈடுபட்டு வருகின்றனர். (இ-64)

## விவசாயிகளுக்கும் துப்பாக்கிகளை வழங்க ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

விவசாயிகளுக்குத் துப்பாக்கிகளை உபயோகிப்பதற்கு அரசாங்கம் மீண்டும் அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன மற்றும் பதில் பொலிஸ்மா அதிபருக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில் தமது விவசாய நடவடிக்கைகளின் பாதுகாப்பைக் கருதி இனிவரும் காலங்களில் விவசாயிகள் துப்பாக்கியை உபயோகிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

அதற்குத்தேவையான அனைத்து வசதிகளையும் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்ததாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பழங்காலத்தில் இருந்து விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளின் போது துப்பாக்கிகளை உபயோகித்துள்ளனர்.

இருந்தாலும் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் துப்பாக்கிகள் வைத்திருப்பதை இலங்கை அரசாங்கம் தடை செய்திருந்தது.

இதன்போது விவசாயிகளுக்கும் இந்தத் தடை அமுல் செய்யப்பட்டது.

இருந்தாலும் அந்தத் தடையை நீக்கி அவர்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக துப்பாக்கி உபயோகிக்க அனுமதி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடல் கொந்தளிப்பாக காணப்படும்

# வடமாகாணத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் காணப்படும் மழையுடனான காலநிலை இன்று 25 ஆம் திகதியிலிருந்து சிறிது மாற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனைய பகுதிகளின் பல இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புக்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்களில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20 - 40 கிலோமீற்றர் வரை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது (மணித்தியாலத்துக்கு 70 - 80 கிலோமீற்றர் வரையான) பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## சம்பிக்கவுக்குப் பிணை



(கொழும்பு)

2016 ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை பிணையில் விடுவிக்க கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரஞ்சனா டி சில்வா நேற்று உத்தரவிட்டார்.

25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீர பிணைகளின் அடிப்படையில் சம்பிக்கவை விடுவிக்க உத்தரவிடப்பட்டதுடன் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிக்கு இடையில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

சாட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுப்பதைத் தவிர்க்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிணையை நிராகரிப்பதற்கு போதிய அளவு காரணங்கள் இல்லாத காரணத்தால் சந்தேகநபரான சம்பிக்க ரணவக்கவை பிணையில் விடுவிப்பதாக நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# 8 ஆவது நாடாளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடர் ஜனவரியில்

(கொழும்பு)

8 ஆவது நாடாளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத் தொடர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 6 மணி வரை நாடாளுமன்ற கூட்டத் தொடர் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன்போதே இது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.


மேலும் அன்றைய தினம் ஜனாதிபதி அரச கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்ததன் பின்னர், பிற்பகல் 12.30 மணியளவில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறவுள்ளது.

அதில் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி முதல் சபை நடவடிக்கைகள் இடம்பெறும் விதம் தொடர்பாக கவனம் செலுத்தப்படவுள்ளது.

அதற்கமைய ஜனவரி மூன்றாம் திகதி ஆரம்பமாகும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் விவாதிக்கப்படவுள்ள விடயங்கள் தொடர்பாக விரைவில் அறிவிக்கப்படும் என நேற்று முன்தினம் கூட்டத்தில் பங்கேற்ற ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தொடரின் போது புதிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்கவுள்ளதுடன் சஜித் பிரேமதாஸ எதிர்க் கட்சித் தலைவராக அன்றைய தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளார். (இ-7)

# ஐ.சி.சி யின் ஒரு நாள் தரவரிசை விபரம்



கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பாரத்துக் காத்திருந்த ஒருநாள் துடுப்பாட்ட மற்றும் பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு தொடருக்கும் பிறகு, சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகிறது.

இதன்படி, தற்போது ஆண்டின் இறுதி தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இதில் முதலாவதாக ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையை பார்க்கலாம்.

1.இந்த பட்டியலில், இந்தியக் கிரிக்கெட் அணியின் விராட் கோஹ்லி 887 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

2.இந்தியக் கிரிக்கெட் அணியின் மற்றொரு வீரரான ரோஹித் சர்மா 873 புள்ளிகளுடன் இரண்டாவது உள்ளார்.

3.பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பாபர் அசாம், 834 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

4.தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பாப் டு பிளெஸிஸ் 820 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார்.

5.நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் ரோஸ் டெய்லர் 817 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

6.நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் கேன் வில்லியம்சன் 796 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளார்.

7.அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் டேவிட் வோர்னர் 794 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளார்.

8.இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஜோ ரூட் 787 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தில் உள்ளார்.

9.மேற்கிந்திய தீவுகள் அணியின் சாய் ஹோப் 782 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.

10.தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் குயின்டன் டி கொக் 781 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தில் உள்ளார்.

**அடுத்தாக ஒருநாள் பந்து வீச்சாளர்களின் தரவரிசையை பார்க்கலாம்.**

1.இந்தியக் கிரிக்கெட் அணியின் ஜஸ்பிரிட் பும்ரா 785 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

2.நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் ட்ரென்ட் போல்ட் 740 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார்.

3.ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் முஜிப் உர் ரஹ்மான் 707 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

4.தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் கார்கிஸோ ரபாடா, 694 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார்.

5.அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பெட் கம்மின்ஸ், 693 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.


6.இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கிறிஸ் வோக்ஸ், 676 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளார்.

7.அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் மிட்செல் ஸ்டார்க், 663 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளார்.

8.பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மொஹமட் ஆமிர், 663 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தில் உள்ளார்.

9.நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் மெட் ஹென்ரி, 656 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.

10.நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் மற்றொரு வீரரான லொக்கி பெர்குசன் 649 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தில் உள்ளார்.



## இலங்கை அணியின் ஓய்வறைக்குச் சென்ற பாகிஸ்தான் அணி வீரர்கள்

இலங்கை அணியை இரண்டாவது டெஸ்டில் தோற்கடித்த பின்னர் பாகிஸ்தான் அணி வீரர்கள் இலங்கை அணியின் ஓய்வறைக்கு சென்று பாகிஸ்தானிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டமைக்காக நன்றி தெரிவித்துள்ளனர்.

இரண்டாவது டெஸ்ட் வெற்றியை கேக் வெட்டி கொண்டாடிய பாகிஸ்தான் அணியினர் பின்னர் இலங்கை அணியின் ஓய்வறைக்கு சென்று அவர்களிற்கு நன்றி தெரிவித்துள்ளனர்.


பாகிஸ்தான் அணியினர் இலங்கை அணியினரின் ஓய்வறைக்கு செல்வதையும் இலங்கை வீரர்களை கட்டித்தழுவதையும் சேர்ந்து படமெடுத்துக்கொள்வதையும் காண்பிக்கும் வீடியோ வெளியாகியுள்ளது.

இதேவேளை இலங்கை அணியின் முக்கிய வீரர்கள் பாகிஸ்தானில் தங்களிற்கு கிடைத்த விருந்தோம்பலையும் வழங்கப்பட்ட பாதுகாப்பினையும் பாராட்டியுள்ளனர்.

பாதுகாப்பும் விருந்தோம்பலும் அற்புதமாகயிருந்தது என தெரிவித்துள்ள இலங்கை அணியின் தலைவர் திமுத் கருணாரட்ண பாகிஸ்தானில் தங்கள் பாதுகாப்பை உறுதி செய்த பாதுகாப்பு தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த டெஸ்ட் போட்டிகளை பார்வையிட வந்த ரசிகர்களிற்கு நன்றி தெரிவித்துள்ள அவர் பாகிஸ்தான் தற்போது கிரிக்கெட் விளையாடுவதற்கு பாதுகாப்பான இடம் என குறிப்பிட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்



## சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை

**(முன்னைநாள் பிரதம லிகிதர்- கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்)**

**(முன்னைநாள் தபாலதிபர்- வட்டக்கச்சி, கண்டாவளை)**

**மண்ணில்:–30.06.1935** **விண்ணில்:–24.12.2019**

*மீசாலை வடக்கு புத்தூர் சந்தியைப் பிறப்பிடமாகவும் இல 740 சிவிக்ஸ் சென்ரர், வட்டக்கச்சி கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும், ஜேர்மனியில் தற்காலிகமாக வசித்து வந்தவருமாகிய **சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை** அவர்கள் நேற்று (24.12.2019) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- பரமேஸ்வரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- பூரணம் தம்பதிகளின் ஆசை மருமகனும் காலஞ்சென்றவரான இராஜராஜேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும், அமிர்தவாணி(சுவிஸ்), கலாவாணி(ஜேர்மனி), சிவேசனராஜ்(லண்டன்), அருள்ராஜ்(வட்டக்கச்சி), லலிதவாணி(இந்தியா) ஆகியோரின் அருமைத் தந்தையும் சிவகுமார்(சுவிஸ்), விக்னேஸ்வரன்(ஜேர்மனி), கௌசிகா(லண்டன்), சந்திரிகா(வட்டக்கச்சி), சபிஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுலக்ஷன், லக்ஷிகா(சுவிஸ்), விதுஷன், வினிதன், விஸ்ணுகன்(ஜேர்மனி), மலர்சிகா, வேதிகா(லண்டன்), அபிஷன்(வட்டக்கச்சி), வளர்நிலா, புகழினியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி, சிவஞானம், பூபதி மற்றும் யோகம்மா, இந்திராணி, திருச்செல்வம்(மீசாலை) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.*

**வட்டக்கச்சி, கிளிநொச்சி** **குடும்பத்தினர்**

# மத்திய வங்கியின் புதிய ஆளுநராக பேராசிரியர் லக்ஷ்மன் நியமனம்


(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் 15 ஆவது ஆளுநராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன் நேற்று செவ்வாய்க் கிழமை தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

இலங்கையின் பிரபல பொருளியலாளரான டபிள்யூ.டி.லக்ஷ்மன், 1994 - 1999 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக கடமையாற்றியிருந்தார்.

அத்தோடு கல்வித்துறைக்காக அவர் ஆற்றிய சேவையை கௌரவிக்கும் வகையில், 2005 ஆம் ஆண்டு பேராசிரியர் லக்ஷ்மனுக்கு தேசமான்ய பட்டம் வழங்கப்பட்டது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தனிப்பட்ட காரணங்களைச் சுட்டிக்காட்டி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்திருந்தார்.



இருப்பினும், சில உள்நாட்டு மற்றும் சர்வதேச நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்பிதழ்களை ஏற்றுக்கொண்டதால், டிசெம்பர் 2 ஆம் திகதியில் இருந்து டிசெம்பர் 20 வரை இராஜினாமாவை நீட்டிக்க அவர் முடிவு செய்திருந்தார்.

அதன்படி கடந்த 20 ஆம் திகதி அவர் பதவியில் இருந்து உத்தியோகபூர்வமாக விலகியதை அடுத்து புதிய ஆளுநராக டபிள்யூ.டி.லக்ஷ்மன் நியமிக்கப்பட்டார் என்பது குிறப்பிடத்தக்கது. (இ-7)


## விற்பனைக்குண்டு

பருத்தித்துறை, யாழ்ப்பாண வீதி புத்தூரில் நல்ல நிலையில் உள்ள (Auto Pars) வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் விற்பனைக்குண்டு.

(1530) தொடர்புக்கு: 077 889 2384

பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (784)

ரெங்கசாமி

கண்டி, அம்பத்தன்ன -077 112 3471

Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ப.ஸ்ரீதரன் அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டுறவு தின விழாவில் சிறந்த கூட்டுறவாளராக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார். (இ-5)

## பூநகரிப்பிரதேசசபை பொதுச் சந்தைகள், கருவாட்டுக்கடைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோரல் அறிவித்தல் -2020

கீழ்குறிப்பிடப்படும் பிரதேச சபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட இடங்களிற்கு உட்பட்ட பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2020 ஆம் ஆண்டிற் காக 01.01.2020 தொடக்கம் 31.12.2020 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு பகிரங்க ஏலம் கோரல் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- ஏலகேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 26.12.2019
- ஏலகேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 07.01.2020 மு.ப. 3.00மணிவரை
- ஏலம் நடைபெறும்திகதி :- 08.01.2020
- ஏலம் நடைபெறும் நேரம் :- 10.00 AM
- ஏலம் நடைபெறும் இடம் :- பூநகரி பிரதேச சபை

பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து பிரதேச சபையில் வழங்குவதன் மூலம் தங்களது வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இவ்விடயம் தொடர்பாக வாடியடி பூநகரியில் உள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் தாங்கள் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ நிர்ணயிக்கப்பட்ட இறுதித் தொகைகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு :- 024 324 3493,021 228 4572 (சி-8645)

அருணாசலம் ஐயம்பிள்ளை,
தவிசாளர்,
பிரதேசசபை, பூநகரி.

# வீட்டின் பின்புறத்திலிருந்து ஏழுமாத சிசுவின் சடலம் மீட்பு

(திருக்கோவில்)

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாம் குடிநிலம் கிராமத்தில் வீட்டின் பின்புறத்திலிருந்து சிதைவடைந்த நிலையில் சுமார் ஏழு மாத சிசுவின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 38 வயதுடைய பெண் ஒருவர் குடிநிலம் கிராமத்தில் வயிற்றில் இருந்த கட்டி ஒன்று வெடித்து விட்டதாக தெரிவித்து கல்முனை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அவரை வைத்தியர்கள் பரிசோதித்துப் பார்த்த வேளை குழந்தை பிறந்தமைக்கான அடையாளங்கள் காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து அப்பகுதி பொலிஸார், கிராம உத்தியோகத்தர் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர் ஆகியோருக்கு தகவல் வழங்கப்பட்டு குழந்தையை தேடிவந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை குறித்த பெண் குடியிருந்த வாடகை வீட்டின் பின்புறத்தில் சிதைவடைந்த நிலையில் இருந்து சிசு ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை அம்பாறை குற்றத் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று தடயவியல் மற்றும் வாக்கு மூலங்களை பெற்றுக் கொண்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சபையினால் கீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2020 ஆம் ஆண்டிற்கு (01.01.2020-31.12.2020) பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன

ஏலம் நடைபெறும் திகதி : 2019.12.27 (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11.00 மணி.
இடம் : வலி. கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், புத்தூர்

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவகட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | |
| 01 | அக்கரைக்கடற்கரைவாகனத்தரிப்பிடமும், சிற்றுண்டிச்சாலைமற்றும்சிறுவர் மகிழ்விடல் | 500.00 | 3000.00 |
| 02 | வளலாய் தம்பாலைபொதுச்சந்தை | 500.00 | 5000.00 |
| | புத்தூர் உப அலுவலகம் | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 5000.00 |
| 02 | நிலாவரைதிறந்தவெளிச்சந்தையும் வாகனத்தரிப்பிடமும் | 500.00 | 4000.00 |
| | கோப்பாய் உப அலுவலகம் | | |
| 01 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10000.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 |
| 02 | உரும்பிராய் கோழி இறைச்சிக்கடை | 500.00 | 3000.00 |
| 03 | ஊரெழுமாட்டிறைச்சிக்கடை | 500.00 | 4000.00 |
| 04 | ஊரெழுஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 |

பகிரங்க ஏலத்திற்கான நிபந்தனைகளை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 500.00 இனையும் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையையும் செலுத்துதல் வேண்டும். இறைச்சிக்கடைகளுக்குரிய குறிக்கப்படும் மாதாந்த வாடகை செலுத்துதல் வேண்டும்.

ஏலத்தில் பங்குபெற விரும்புபவர்கள் அவர்களது அடையாளஅட்டையைக் கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப் பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

சித்தியடையும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையின் (1/2, 1/3) பகுதியை 2019.12.30 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக குறிப்பிடப்படும் உப அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும். (சி-8646)

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலி. கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.
2019.12.25

# சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகளின் 15 ஆவது ஆண்டு நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகளின் 15 ஆவது ஆண்டு நினைவுதினம் ''மீண்டும் எழுவோம்'' எனும் தொனிப் பொருளில் நாளை 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் தெல்லிப்பழை துர்க்காபுரம், காங்கேசன்துறை வீதியிலுள்ள சிற்பாலய கலைக் கூடத்தில் நடைபெறும். இதன்போது வரலாற்றுப் பதிவான சுனாமி சிற்பத்தின் முன்பாக அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும். (இ-5-18)

# மலசலக்கூடக் கழிவை அகற்றாவிட்டால் ரவிராஜின் சிலையிலுள்ள பெயர்ப் பலகையை உடைப்பேன்

## நகரசபை முன் பெண் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தனது வீட்டில் உள்ள மலசலக்கூடக் கழிவை சாவகச்சேரி நகரசபை தான் அகற்ற வேண்டும் எனக் கோரி மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் உறவினரான பெண்ணொருவர் சாவகச்சேரி நகர சபையின் வாயிலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

எனது வீட்டில் உள்ள மலசலகூடம் நிரம்பி விட்டது. ஆகவே சாவகச்சேரி நகர சபைக்கு நான் வரி செலுத்துவதால் நகரசபையிடம் கழிவை அகற்றுமாறு கோரினேன். ஆனால் நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர், தவிசாளர் மற்றும் உப தவிசாளர் ஆகியோர் சாவகச்சேரி நகர சபையால் மலசலக்கூடக் கழிவை அகற்ற முடியாது எனவும் சாவகச்சேரி பிரதேச சபை அல்லது வேறு தனியார் நிறுவனங்களிடம் தெரிவிக்குமாறு கூறியிருந்தனர். நான் சாவகச்சேரி நகர சபைக்கே சோலை வரி செலுத்துகின்றேன். அவர்களே இந்தக் கழிவுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அவ்வாறு நகர சபையால் முடியாது விட்டால் நான் இதுவரை காலமும் செலுத்திய வரிப் பணத்தை மீளத் தர வேண்டும். இன்று நான் போராட்டத்தில் ஈடுபடும் இவ்வேளையில் தவிசாளர் வந்து என்னைச் சந்திக்க முடியும்.

ஆனால் அவர் என்னைச் சந்திக்கத் தயாராக இல்லை. எனது அம்மாவின் அந்தியேட்டிக் கிரியை எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மலசலக்கூட கழிவுகளை அகற்றாவிட்டால் வீட்டிற்கு வருபவர்களை மலசலம் கழிக்க நகர சபைக்கே அழைத்து வருவேன். எனது கழிவகற்றல் பிரச்சினை தீராது விட்டால் இரவோடு இரவாக சாவகச்சேரி பிரதேச சபை முன்றலில் உள்ள ரவிராஜ் சிலையின் பெயர்ப்பலகையை உடைத்தெறிவேன் எனவும் அவர் தெரிவித்தார். (இ-30)

# யாகப்பர் ஆலய ஒளிவிழாவும் கலைநிகழ்வும் பரிசளிப்பும்

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் கிறிஸ்து பிறப்பின் ஒளிவிழா நிகழ்வும் பரிசளிப்பு, கலை நிகழ்வும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் ஆலயக் கலை அரங்கில் நடைபெறுமென பங்குத்தந்தை அருட்பணி சாள்ஸ் யஸ்ரின் அடிகளார் தெரிவித்தார்.

இவ் ஆலய வளாகத்தினுள் புதிதாக அமைக்கப்பட்ட கலையரங்கு புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி சாள்ஸ் யஸ்ரின் அடிகளாரால் கடந்த 22 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-106)

# கனவுகளும் பலன்களும்

## கனவில் உடல் உறுப்புகள் வந்தால்

கை உடைந்து விட்டது போலக் கனவு கண்டால் அவமானத்துக்கு உள்ளாக நேரும். பலவிதத் தொல்லைகள் ஏற்படும். காதுகளையோ, அல்லது காதில் நோய் ஏற்படுவது போலவோ கனவு கண்டால் குடும்பத்தில் கலகம் ஏற்படும்.

கண்களில் ஏதாவது விழுந்து அவை சிவந்து விட்டது போலவும் அழுவது போலவும் கனவு கண்டால் உடல்நலக் கேடும் துன்பமும் உண்டாகும். கண்கள் படபடத்துக் கொள்வது போலக் கனவு கண்டால் விபத்து நேரும். அல்லது யாராவது நெருங்கிய உறவினர் மரணமடைவர்.

வலது கண் இமை மட்டும் துடிப்பது போலக் கனவு கண்டால் நல்லது நடக்கும். எதிர்பாராத பண வரவு ஏற்படும்.

ஒருவர் தான் விகாரத் தோற்றமடைந்துவிட்டது போலக் கனவு கண்டால் நீண்டநாள் ஆசை விரைவில் நிறைவேறும்.

தலைமுடி சிக்குப் பிடித்திருப்பது போலக் கனவு கண்டால் குடும்ப உறுப்பினர் ஒருவரால் தொல்லைகள் ஏற்படும். நரைத்திருப்பது போலக் கனவு கண்டால் காதலில் வெற்றி கிட்டும். தலையில் வழுக்கை விழுவது போலக் கனவு கண்டால் நோய் ஏற்படலாம்.

# பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்டறக்ட் கழகத்தால் வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுமதியுடன், RATNAM FOUNDATION நிறுவனத்தின் அனுசரணையில் யாழ்.மாவட்ட பாடசாலைகளில் தரம் 6 முதல் 13 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையில் 4 பிரிவுகளாக நடத்தப்பட்ட பொது அறிவு போட்டிப் பரீட்சையின் பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் (திருக்குடும்ப கன்னியர்மடம் எதிரில்) காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாடசாலை மற்றும் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவுள்ளன. வெற்றி பெற்ற மாணவர்களை பாடசாலை சீருடையுடன் அவர்களை வழிநடத்திய ஆசிரியருடன்/ஆசிரியர்களுடன் வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கலைஞர்கள் கௌரவிப்பு





(யாழ்ப்பாணம்)

உசன் சனசமூக நிலையத்தினரால் உசன் கிராமத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை உசன், பண்டிதர் சரவணமுத்து நூலக மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் ஓய்வு நிலை அதிபர் கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ஜெ.செல்வராணி கலந்து கொண்டார் (இ-5)

# இராசி பலன்

**மீனம்:** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மேடம்:** பொறுமையாக இருந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள், எதிர்ப்பாராத வகையில் சில மனக்கஷ்டங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**இடபம்:** களஸ்திர நன்மையுண்டு, முயற்சிகளில் எளிதில் முன்னேற்றம் பெறுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்:** பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேறறம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

இராசி பலன்

கிரகநிலை

ராகு

சுக்

சனி.சூரி. புத கேது.குரு

சந்

செவ்

சந்திராஷ்டமம்

கார்த்திகை,ரோகினி

25.12.2019
மார்கழி 09, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 11.51 மணிவரை
கேட்டை மாலை 5.32 மணிவரை
சுபநேரம்- 4.56-6.26 மணிவரை
இராகுகாலம்-12.26-1.56 மணிவரை
இயேசு பாலன் பிறப்பு,
நத்தார் பண்டிகை,
அமாவாசை விரதம்
- வளவன்

**கடகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** பெண்கள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள், பணப்புழக்கம் கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுப காரியங்களுக்கான விரயங்கள் மேலோங்கும் நாள்.

T.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!!!!

- பான்சி சாறிகள் ஒரு சாறி எடுத்தால் அதே சாறி இலவசம்
- பான்சி சாறி, கொட்டன் சாறிகள் 1000/=
- பெண்களுக்கான கொட்டன் சல்வார் 2000/=
- பான்சி சல்வார்கள் 40 % வரை கழிவு
- ஆடவர்களுக்கான சோட்ஸ் 500/=
- 3 கொட்டன் TOP 1000/=

டிசெம்பர் 31 ஆம் திகதி வரை மட்டுமே!

(C-8586)

T.SANGARAPPILLAI & SONS

21, Modern Market, Power House Road, Jaffna.

கிளை
பிரமாண்டமான காட்சியறை
225C ஆஸ்பத்திரி பின்பக்கம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 5397

Email :sangarappillaiandsons@gmail.com

# ஆட்டோ கட்டணம் குறைப்பு

## சாரதிகள் சங்கம் தீர்மானம்

(கொழும்பு)

ஆட்டோக்களின் கட்டணத்தை குறைக்க ஆட்டோ சாரதிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த தீர்மானம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தப்படவுள்ளதாக ஆட்டோ சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் ஒரு கிலோ மீற்றருக்கான கட்டணத்தை 10 ரூபாயாலும், அடுத்த கிலோமீற்றர் கட்டணத்தை 5 ரூபாயாலும் குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக அச்சங்கத்தின் தலைவர் சுனில் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் புதிய வரிச் சலுகைகள் காரணமாக ஆட்டோ உதிரிப் பாகங்களின் விலை திடீரென வீழ்ச்சியடைந்ததால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அச்சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (இ-7)

# டெங்கு நோய் விழிப்புணர்வு




(யாழ்ப்பாணம்)

வேகமாகப்பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கி அண்மையில் டெங்கு நோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது. (இ-7)



# சமூக விரோதக் குழுவுடன் தொடர்பு பொலிஸார் மீது அதிக குற்றச்சாட்டுக்கள்

## ◆ தகவல் பரிமாறுவது உண்மையே-பொலிஸார்
## ◆ வழக்குப் பிரிவுகளை மாற்ற வேண்டும்-சட்டத்தரணிகள்
## ◆ சட்டத்தரணிகள் ஆஜராகக் கூடாது-பொதுமக்கள்
## ◆ விசேட தொ.பே.இல:- 071 859 1315 அறிவிப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறுகின்ற அதிகளவிலான சட்டவிரோத செயற்பாடுகள் பொலிஸாரின் அசமந்தத்தாலேயே இடம்பெறுவதாக யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மண் கடத்தல், போதைப்பொருள் பாவனை, வாள்வெட்டு போன்ற சம்பவங்கள் அதிகரித்தமைக்கு பொலிஸார் தான் பொறுப்புக்கூற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

சுட்டவிரோத குழுக்கள் தொடர்பில் பொலிஸாருக்கு பொதுமக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படும் போது முறைப்பாட்டாளர்கள் தொடர்பில் சட்டவிரோத குழுக்களுக்கு தகவல்களை பொலிஸாரே பரிமாற்றுகின்றனர்.

இதன் காரணமாக சட்டவிரோத குழுக்கள் முறைப்பாட்டாளர்களை அச்சுறுத்துவதும் வீடுகள் மீது தாக்குதல் நடத்துவதற்கும் பொலிஸாரின் உதவியே காரணம்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், சட்டவிரோத குழுக்களுடன் சில பொலிஸார் தொடர்பில் உள்ளமை உண்மையே என தெரிவித்தார்.

சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் சட்டத்தரணிகள் கருத்துக் கூறும் போது, போதைப் பொருட்களுடன் கைது செய்யப்படுபவர்களை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படும் போது இலகுவாக நீதவான் நீதிமன்றங்களில் பிணை பெற்று வெளியேறுகின்றார்கள்.

அதனால் பொலிஸார் மீது நாம் குற்றச்சாட்டாக சொல்லாமல் மேல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி புனர்வாழ்வு அழிக்கக்கூடிய சட்ட பிரிவுகளில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்என கூறினர்.

பொதுமக்கள் தரப்பிலிருந்து கருத்துத்தெரிவிக்கையில், சட்டவிரோத குழுக்களில் செயற்படுவோர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரும் சட்டவிரோத சொயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே இது தொடர்ச்சியாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படும் சட்டவிரோத குழுக்களை சேர்ந்தவர்களுக்கு சார்பாக சட்டத்தரணிகள் ஆஜராகாமல் விடுவார்கள். ஆனால் குற்றங்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை குறைவடையும்.

இவ்வாறு பல்வேறு தரப்பினராலும் சட்டவிரோத குழுக்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இந் நிலையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தொடர்பான விபரங்களையோ, முறைப்பாட்டையோ தெரிவிக்க முடியும். அவ்வாறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்காது விட்டால் 071 859 1315 எஸ்.எஸ்.பி. செனவீரவை தொடர்பு கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கலந்துரையாடலில் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்புப் பிரிவினர், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-10)

## 100 துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்





(யாழ்ப்பாணம்)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவன் வணிக சூரியவின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக Limited Brands Mast Cares Team USA – Buying Office in Colombo Named Mast Industries Far East Limited நிறுவனத்தாரின் பூரண நிதி அனுசரணையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வசிக்கின்ற குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்களுக்கும் மாணவர்களுக்கும் 100 துவிச்சக்கரவண்டிகள் மற்றும் தென்னங்கன்றுகளும் வழங்கும் நிகழ்வானது யாழ்.ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் நேற்று யாழ்.பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கத்தோலிக்க மதகுருமார்கள், யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி, 51 மற்றும் 52 படைப்பிரிவுகளின் தளபதிகள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பாடசாலை மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். (இ-7)

# யாழிலேயே வாள்வெட்டுக்கள் அதிகம் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் ஆறு குழுக்கள் அடையாளம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோதச் செய்ற்பாடுகளில் ஈடுபடும் 6 குழுக்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் சேனாரட்ன தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சட்டவிரோதக் கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்.மாவட்டத்திலேயே வாள் வெட்டுக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பொலிஸார் தொடர்பில் பொது மக்கள் தரப்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

சட்டவிரோதக் குழுக்கள் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கும்போது அந்த முறைப்பாடுகள் தொடர்பில் சட்டவிரோதக் குழுக்களுக்கு தெரிய வருகிறது.

எமது பொலிஸ் பிரிவுகளிலும் குறைபாடுகள் உள்ளன. பொது மக்கள் முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்காக தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கடமைகளில் உள்ள நிலையில் அவர்கள் ஊடாகத் தகவல் பரிமாறப்பட வாய்ப்புள்ளது.

கடந்த வாரம் வாள்வெட்டுக் குழுக்களுடன் சம்பந்தப்பட்ட ஏழு பேரைக் கைது செய்துள்ள நிலையில் மூன்று பேரைத் தேடி வருகின்றோம்.

கைது செய்யப்படும் வாள்வெட்டுக் குழுவினர் பெரும்பாலும் தமக்குள் இருக்கும் முரண்பாடுகள் காரணமாக ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்கின்றார்கள்.

எனவே வாள்வெட்டுக் குழுக்களின் செயற்பாடுகள் பழிவாங்கலை அடிப்படையாகக் கொண்டும் இடம்பெற்று வருகின்றது.

எனவே மக்களை அச்சுறுத்தும் எவ்வகையான செயற்பாடுகளுக்கும் பொலிஸார் இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதோடு பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் நான் தொடர்ந்து கண்காணிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பிரமி

Botanical Name-Bacopa monnieri

Family-Scrophulariaceae

தரையோடு படர்ந்து வளரக் கூடிய வளைந்தும் சதைப்பிடிப்பான தரை படர் செடியாகும். சதைப்பிடிப்பான இலைகள், இலைக்காம்புகளற்றவையாக வெள்ளை நிற பூக்களைக் கொண்ட செடியாகும். இலைகள் கோல வடிவானவை. எதிரிலையடுக்கம் கொண்டவை.

அத்துடன் ஓராண்டுச் செடியாகும். ஈரலிப்பான இடங்களில் நீரோட்டமுள்ள கரையோரங்களில் படர்ந்து வளர்ந்து காணப்படும். புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் பூக்களைக் காணக் கூடியதாக இருக்கும். இதனுடைய தண்டுத் துண்டங்கள் மூலம் வேர் முடிச்சுகளுடன் கூடிய தண்டுக் கன்றை ஒட்டு பயிரிடலாம். மழை காலங்களில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படும். கார்த்திகை, மார்கழி மாதங்களில் விதைகளை சேகரிக்கலாம். நாற்றுக்களை போடுவது வைகாசி-ஆடிமாதம் வரை உருவாக்கலாம். கன்றுகளை நட்டு 90 நாட்களின் பின் அறுவடை செய்யலாம். புரட்டாதி, ஐப்பசி மாதங்கள் அறுவடைக்கு ஏற்ற காலமாகும். ஒரு செடியானது 20-30 cm நீளமாக வளர்ந்த பின்பே அறுவடை செய்ய வேண்டும். இதன் முழுச் செடியும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. மண்ணிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட செடிகளை நன்றாகக் கழுவி ஓர் துப்புரவான தாளில் 4 நாட்கள் வெயிலில் வைத்து அதனை தொடர்ந்து 7-10 நாட்கள் நிழலில் உலர்த்தவும்.

நீண்ட நாட்கள் களஞ்சியப்படுத்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் 6 மாதங்களுக்கு மேல் இதனை களஞ்சியப்படுத்தினால் பிரமியில் இருக்கும் Bacoside எனும் வேதியற் பொருள் குறைவடையத் தொடங்கி விடும்.

பிரமியின் முழுச் செடியும் மருத்துவத்தில் பயன்படுகிறது. நரம்புகளையும் மூளைக் கலங்களையும் பலப்படுத்துவதில் முக்கியத்துவம் வாய்ந்த செடியாகும். நித்திரையின்மைக்கும் (Insomnia), ஞாபக மறதி (Memory loss) குழந்தைப் பிள்ளைகளுக்கு ஏற்படும் மூளைக் கலங்கள் குறைபாடு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு பிரமியை மருத்துவ நெய்யாக தயாரித்து வழங்கப்படுகிறது.

### பிரமித் தேநீர்

முழுச் செடியையும் சேகரித்து கழுவி நன்றாக நிழலில் உலர்த்தி பொடி





த்து அரித்து ஓர் கண்ணாடிப் போத்தலில் போட்டு வைத்துக் கொள்ளவும். 1/2 தேக்கரண்டி (4g) எடுத்து 150 ml கொதி நீரில் கலந்து 3-5 நிமிடம் விட வேண்டும்.

பின்பு சிறிது பனங்கட்டியுடன் தேநீர் அருந்துவது போல் அருந்தி வர நரம்புக் கலங்களை பலப்படுத்துவதோடு மூளைக் கலங்களையும் பலப்படுத்தி ஞாபக சக்தியையும் பலப்படுத்தும். இதுவோர் memory enhancer ஆகும்.

### பிரமியை எவ்வாறு உணவாகப் பயன்படுத்தலாம்

இளம் தண்டு பிரமிகளைச் சேகரித்து முற்றிய தண்டு, பூக்கள் மொட்டுக்களை நீக்க வேண்டும். சிறுசிறு துண்டுகளாக வெட்டி, கழுவி வைத்துக் கொள்ளவும். வெள்ளைப் பூண்டை தோல் நீக்கி சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளவும். பின்பு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு வெட்டிய வெள்ளைப் பூண்டை இட்டு வதக்கி பிரமியையும் இட்டு வதக்கி மூடி விடவும். சிறிய நேரத்தின் பின் தேவையான உப்பு நேர்த்து அத்துடன் சிறிதளவு பனைவெல்லம் சேர்த்து வைத்துக் கொள்ளல். சிறு பிள்ளைகள் விரும்பி உண்பார்கள். இது நரம்பு மண்டலத்தை பலப்படுத்துவதுடன் Neuro Protector ஆகவும் செயற்படும்.

### மனப்பதற்றத்திலிருந்து விடுபட

உடம்பில் சூடு அதிகரித்தால் மனப்பதற்றம் ஏற்படும். உடம்பானது காற்று, சூடு, குளிர்ச்சி எனும் 3 இயல்புகளின் ஆற்றலால் சீராக இயங்குகின்றது. பிரமியானது உடம்பிலிருந்து நச்சுத் தன்மையையும் சூட்டையும் தணிக்கவல்லது.

அதாவது உடம்பையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்கக் கூடியது. பிரமி இலை, இளம் தண்டு இவைகளை சேகரித்து நன்றாகக் கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொடியை இட்லி பொடியுடன் அல்லது சாதத்துடன் சேர்த்து நெய்யும் விட்டு சாப்பிட உடலும் மூளையும் பலம் பெறும்.

### பிரமிநெய்

இதனை வீட்டிலேயே தயாரித்து பயன்படுத்தலாம்.

பிரமிச்சாறு-50 மில்லி
இஞ்சிச்சாறு-50 மில்லி
பசு நெய்-50 மில்லி
வசம்பு-5 gm

ஒரு வாணலியில் பிரமிச்சாற்றை கொதிக்க விடவும். கொதித்ததும் பசு நெய்யை ஊற்றி இஞ்சிச் சாற்றை ஊற்றி, வசம்பை தணலில் சுட்டு கரியாக்கி தோல் சீவி பொடித்து சேர்க்கவும். எல்லாவற்றையும் சேர்த்து நீர் வற்றும் வரை எரித்து நெய் மணம் வந்து நுரை வந்து அடங்கியதும் இறக்கவும். 6 மாதத்திற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு 2 துளிகளும் ஒரு வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு 1/2 தேக்கரண்டியிலிருந்து ஒரு தேக்கரண்டி வரையும் வளர்ந்தவர்களுக்கு ஒரு மேசைக் கரண்டி அளவு காலை, மாலை பயன்படுத்தலாம். மன அழுத்தம் குறைந்து



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

உடலும் அதாவது நரம்பு மண்டலம் பலப்படும். பிரமிக்கு துவர்ப்பு, கைப்பு சுவைகள் இருப்பதால் இரத்தத்தை சுத்திகரிக்கும் பண்பும் உண்டு.

இதன் இலைச்சாறு 6 கிராமுடன் நெய்சேர்த்துக் காய்ச்சியாவது, மேற்படி சாற்றுடன் 4 கிராம் கோஷ்டத் தூள் சேர்த்துக் கொடுக்க பித்தக் குற்றம் தீரும்.

இலையை வெண்ணெயில் வதக்கிச் சாப்பிட தொண்டைக் கம்மல் நீங்கும்.

இலையைத் தண்டுடன் இடித்துச் சாறு பிழிந்து, ஒரு மேசைக் கரண்டி அளவு கொடுக்க எரிச்சலோடு கூடிய நீர்ச் சுருக்குத் தீரும்.

இலையை நசுக்கி வேக வைத்து நெஞ்சில் பற்றிட, நெஞ்சில் கட்டிய கோழை வெளிப்படும்.

இலைச் சாற்றை ஒரு தேக்கரண்டி அளவு தேனுடன் கலந்து கொடுக்க குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல் தணியும்.

இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி, வீக்கங்களில் வைத்துக் கட்ட வீக்கம் தணியும்.

''சீலின பசையாற்
சிளைத்த வலிவீக்கங்
காலின் பிடிப்
பொடுகை காலெரிவு-
மேனிலெழு
வாதத்தா நோவு
மலக்கட்டுஞ் சோபையும்
போஞ்
சீதத்தாஞ் சப்தளைக்குச் சேர்''

இதனால் சீல்களில் கபம் பெருக்கடைவதால் பிறந்த வலி, கால் பிடிப்பு, கை, கால் எரிவு, கடுப்பு, மலபந்தம், வீக்கம் முதலியன போகும்.

## கொக்கிளாய் களப்பில் தொடரும் சட்டவிரோத செயற்பாடுகள்

# புதிய அரசு கண்டுகொள்ளுமா?

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு - கொக்கிளாய் களப்பில் தொடர்ச்சியாக சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகள் இடம்பெறுவதனால் தமது வழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

அத்துடன் கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்களிடம் இது தொடர்பில் பல தடவைகள் முறையிட்ட போதிலும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் தற்போதுள்ள புதிய அரசு மற்றும் கடற்றொழிலுடன் தொடர்புடைய அமைச்சு இந்த விடயத்தில் கவனம் செலுத்தி இப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீரவினைப் பெற்றுத்தர முன்வரவேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இக் களப்பினுள் இயந்திரப்படகுப்பாவனை மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்களைப் பிடித்தல் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதனால் களப்பிலுள்ள மீன்கள் அழிவடைந்து வருகின்றன.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள இக் களப்பினை நம்பி வாழும் மக்களின் வழ்வாதாரம் வெகுவாகப் பதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே புதிய அரசும், கடற்றொழிலுடன் தொடர்புடைய அமைச்சும் இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி தமது வாழ்வாதாரத்தினை காப்பாற்றித்தருமாறும் மீனவர்கள் கோருகின்றனர். (9)

## வவுனியா பொலிஸ் நிலையம் காவல்துறை என மாற்றம்




(நெளுக்குளம்)

வவுனியா பிராந்திய பொலிஸ் நிலைய பெயர்ப்பலகை காவல்துறை என மாற்றப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி கோட்டாபய தமிழ் பகுதிகளில் தமிழ் மொழி நடைமுறையில் முன்னுரிமை அளிக்கப்படும் என தெரிவித்துள்ளதையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் பெயர்ப்பலகையில் தமிழ் மொழியில் மாற்றம் செய்யப்பட்ட போதிலும் முன்னுரிமை சிங்கள மொழிக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப்பகுதிகளில் இயங்கி வந்த பொலிஸ் நிலையங்களில் காவல்துறை என்ற தமிழ் சொல்லை அறிமுகப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-299)

## இந்திய அரசால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்யத் தீர்மானம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநலசேவை நிலையங்களுக்கு இந்திய அரசினால்வழங்கப்பட்ட 96 உழவு இயந்திரங்கள் ஏலத்தில் விற்பனை செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய விவசாயிகளின் தேவைகளுக்கென இந்திய அரசினால் வழங்கப்பட்ட 126 வரையான உழவு இயந்திரங்கள் கமநல சேவை நிலையங்கள் ஊடாக சேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்தன.

தற்போது இதனைப்பயன்படுத்துவதற்கு விவசாயிகள் முன்வராத நிலையில் மேற்படி உழவு இயந்திரங்கள் பயன்பாடற்ற நிலையில் கமநல சேவை நிலையங்களில் காணப்படுகின்றன.

இவற்றை ஏனைய திணைக்களங்களுக்கு கொடுப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்குமாறு கடந்த ஜுன் மாதம் 24 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கோரிக்கை முன் வைக்கப்பட்டதுடன் இதனைத் தொடர்ந்து கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் ஆராயப்பட்டதையடுத்து மொத்தமாவுள்ள 126 உழவு இயந்திரங்ளிலும் நல்லநிலையில் உள்ள 96 உழவு இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்வது என்றும் இவை தேவைப்படும் திணைக்களங்கள் இதனைப்பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தீர்மானிக் கப்பட்டுள்ளது. (9-315)




## சுனாமியால் காவு கொள்ளப்பட்ட உறவுகளுக்கான ஆத்ம சாந்தி பிரார்த்தனைக்கு அழைப்பு

(நெளுக்குளம்)

சுனாமியால் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் 15 ஆம் வருட நினைவு தினத்தை முன்னிட்டு நாளைய தினம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விசேட வழிபாடு மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய செயலாளர் சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள், வருடா வருடம் எமது ஒன்றியத்தினால் சுனாமியினால் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் ஆன்ம ஈடேற்றத்தினை வேண்டி வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் இந்த வருடம் குருமன்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 07.30 மணியளவில் விசேட ஆத்மசாந்தி பூஜை நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன.

எனவே அந்நிகழ்வில் ஆலயக்குருமார்கள், பரிபாலன சபையினர், பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள், ஊடகத் துறையினர் அனைவரும் உயிரிழந்தவர்களுக்கான விசேட வழிபாடுகளிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு ஆன்ம ஈடேற்றத்திற்காக வேண்டிக் கொள்வோம் எனத் தெரிவித்தார்.

இதேவளை வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய நிர்வாகம் மற்றும் நகர சபையின் ஏற்பாட்டில் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள தூபியடியில் (இலங்கையில் முதலாவதாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி) காலை 9 மணிக்கு சுனாமி நினைவு தினம் அனுஷ்டிக்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-299-250)



கிளிநொச்சி சமூகமட்ட அமைப்புக்களின் சம்மேளனப் பிரதிநிதிகளை பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் புளொட்டின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மணியம் ஆகியோர் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடினார்கள். இதில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக சமூக மட்ட பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

## மன்னாரில் "அம்மாச்சி" உணவகம் திறப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட அம்மாச்சி உணவகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. மன்னார் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் கே.எம்.ஏ.சுகூர் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்து கொண்டு வைபவ ரீதியாக திறந்து வைத்தார். குறித்த உணவகத்தின் ஊடாக தொழில் வாய்ப்பு அற்ற 10 இற்கும் மேற்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கான தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

## வவு.மாணவிக்கு வாக்குறுதி அளித்த நாமலின் செயலாளர்

(குருமன்காடு)

குருதியைப் பெற்றுக் கொள்ளும் தானியங்கி ரோபோ இயந்திரத்தை கண்டுபிடித்த வவுனியா மாணவி பு.றோகிதாவுக்கு வீட்டுத் திட்டம் மற்றும் லண்டனில் இருந்து பொருட்கள் கொள்வனவு செய்வதற்குமான நிதியுதவி வழங்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் செயலாளர் பாலித்த தெரிவித்துள்ளார்.

நேற்று சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு சென்ற நாமல் ராஜபக்ஷவின் செயலாளர் பாலித்த, வவுனியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமதிபால, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை பகுதியின் பொதுஜன பெரமுன இணைப்பாளர் பாபு மற்றும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை தலைவர் வசந்த உள்ளிட்ட குழுவினர், பாடசாலை அதிபர் பி.கமலேஸ்வரி, சாதனை மாணவி றோகிதா புஸ்பதேவன் மற்றும் அவரது குடும்பத்தினரை சந்தித்து கௌரவிப்பு வழங்கிய போது குறித்த வாக்குறுதியை வழங்கினார்.


இலத்திரனியல் பொருட்களை லண்டனில் இருந்து கொள்வனவு செய்வதற்கு நிதி தேவையாகவுள்ளதாக மாணவி இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-250)





கிறிஸ்மஸ் தினத்தினை முன்னிட்டு வவுனியா குடியிருப்பு கித்துள் வீதியில் அமைந்துள்ள புனித பேதுரு ஆலயத்தில் இன்னிசை ஆராதனை (கரோல் கீதம்) இடம்பெற்றது. கிறிஸ்மஸ் தினத்தினை முன்னிட்டு ஆலய தந்தை ரேபரன் கெனடியின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக கித்துள் வீதியிலிருந்து நத்தார் தாத்தாவுடன் மக்கள் பவனியாக ஆலயத்தினை வந்தடைந்து ஆலயத்தில் இன்னிசை ஆராதனை இடம்பெற்றதுடன் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன. இதன்போது இறை செய்தியினை அருட்தந்தை போல் நட்சத்திரம் வழங்கியிருந்தார். (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

## காட்டு யானையின் தாக்குதலில் நாசமாகிய தற்காலிக வீடு



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கணேசபுரம் பகுதிக்குள் நேற்று அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் தற்காலிக வீடொன்றினை சேதப்படுத்தியுள்ளதுடன் பயன்தரு மரங்களையும் சேதமாக்கியுள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் உறங்கிக்கொண்டிருந்த சமயத்தில் அதிகாலை 2 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். குறித்த வீட்டினை அந்த பகுதிக்கான கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேசசபை உறுப்பினர் பரிகரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் யானைகளின் அட்டகாசத்தால் அப்பகுதி மக்கள் தினமும் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர். (9-299)

# நீரில் மூழ்கிய வயல் நிலங்கள்

## படகுகளின் உதவியுடன் விவசாயிகள் மீட்பு





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக மாவட்டத்தின் பல இடங்களும் தற்போது நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் கமநல சேவைப்பிரிவிக்குட்பட்ட வயல் நிலங்கள் பலவும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக எரிஞ்சகாடு மற்றும் சலப்பையாறு உள்ளிட்ட பலநூற்றுக்கணக்கான நெற்பயிர்ச்செய்கை நிலங்களே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளன.

இவ்வாறு வெள்ள நீர் வயல் நிலங்களை மூடியுள்ள நிலையில், வயல் காவலுக்காக குறித்த வயல் நிலங்களில் இருந்த விவசாயிகளும் வெள்ள நீரில் சிக்குண்டிருந்தனர். இந் நிலையில் அவ்வாறு வெள்ளநீரில் சிக்குண்டிருந்த 34 விவசாயிகளை அப்பகுதியைச்சேர்ந்த மீனவர்கள் தமது படகுகளின் மூலம் மீட்டமையும் குறிப்பிடத்தக்கது. (9)

# சத்துணவை பெறுவதற்கு நீண்டதூரம் அலைந்து திரியும் கர்ப்பவதிகள்

## அவல நிலையை போக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட கர்ப்பவதிகளுக்காக மாதாந்தம் வழங்கப்படும் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருட்களை பெறுவதற்கு நீண்டதூரம் அலையும் அவல நிலை காணப்படுகின்றது.

கர்ப்பவதிகளின் நன்மை கருதி மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப்பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட கர்ப்பவதிகளுக்கான இரண்டாயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப்பொருட்கள் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஊடாக மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிளைகள் யாவும் மூடப்பட்ட நிலையில் மேற்படி சத்துணவுப் பொதிகள் பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் வைத்தே தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் புன்னைநீராவி, பிரமந்தனாறு, கல்மடுநகர், கல்லாறு, தட்டுவன்கொட்டி, கோரக்கன்கட்டு உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள கர்ப்பவதிகள் இவ்வாறு சத்துணவுகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை கர்ப்பவதிகளுக்கு பொதி செய்து வழங்கப்பட்ட சத்துணவுகள் தரமற்ற நிலையில் காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே கர்ப்பவதிகள் தமக்கான சத்துணவுப்பொதிகளை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## மடு திருத்தலத்துக்கு சென்ற மன்.பிரதி பொலிஸ்மா அதிபர்



(மன்னார்)

வன்னி மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரோஹன் ஜே.சில்வா கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் மடு திருத்தலத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது மடு அன்னையிடம் ஆசி பெற்றதோடு மடு திருத்தல பரிபாலகருடன் கலந்துரையாடினார். (9-285)

## சந்தைக்கட்டடம் திறப்பு



(அக்கராயன்)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இரண்டு மில்லியன் (இருபது இலட்சம்) ரூபா செலவில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடம் நேற்று முன்தினம் உறுப்பினர் சிவமோகனால் திறந்து வைக்கப்பட்டது. (9-350)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# மீள்குடியேற்ற அமைச்சால் வழங்கப்பட்ட 1360 வீடுகளில் 646 வீடுகள் பூர்த்தி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக வழங்கப்பட்ட 1360 வீடுகளில் 646 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செலயக தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு திட்டங்களினூடாக வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக முதற்கட்டமாக 630 வீடுகளும் இரண்டாம் கட்டமாக 730 வீடுகளுமாக மொத்தம் 1360 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன.

தலா பத்து இலட்சம் ரூபா செலவில் வழங்கப்பட்ட இவ்வீடுகளில் இதுவரை 646 வீடுகள் முழுமை பெற்றுள்ளன என மாவட்ட செயலகத்தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

அதாவது முதற்கட்டமாக வழங்கப்பட்ட வீடுகளில் 595 வீடுகளும் இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட வீடுகளில் 51 வீடுகளும் மாத்திரமே நிறைவு பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது. (9-315)




## வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடமாற்றம்


(நெளுக்குளம்)

வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரசன்ன வெலிகள நேற்று முதல் கொழும்பு பொலிஸ் தலைமையகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

கடந்த நான்கு மாதங்களாக வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இவருக்கு நேற்று முதல் கொழும்பு பொலிஸ் தலைமையகத்திற்கு இலங்கை பொலிஸ்மா அதிபரினால் இவ்விடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (9-299)





முல்லைத்தீவு மாவட்ட படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் நத்தார் கரோல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது. பாதுகாப்பு படைகளின் 68 ஆவது படைப்பிரிவின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அருண ஆரியசிங்க தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு பாதுகாப்பு படை கட்டளைத் தலைமையகத்தின் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெயந்த செனவிரத்ன, யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் வணக்கத்துக்குரிய அருட்பணி பி.ஜே.ஜெபரட்னம் அடிகளார், 59 ஆவது படைப்பிரிவின் படைத் தளபதி பிரிகேடியர் பிரியந்த பெரேரா, 64 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி மேஜர் ஜெனரல் கீர்த்தி கொஸ்தா உள்ளிட்ட உயர் அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட குருமுதல்வர் உட்பட்ட கத்தோலிக்க மதகுருமார், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# பாரதம்

## இந்தியாவில் பொருளாதார தேக்கநிலை; சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

(டில்லி)

இந்தியா குறிப்பிடத்தகுந்த பொருளாதார தேக்கநிலைகளுக்கு இடையில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மைய ஆண்டுகளின் வளர்ச்சியில் அதற்குத் தகுந்த முறைசார் தொழில் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை எனவும் உழைப்புச் சந்தை பங்கேற்பும் பெரிய அளவில் சரிவு கண்டுள்ளது என்றும் நிதியத்தின் அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வோஷிங்டனில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், "உலகின் வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா மில்லியன் மக்களை வறுமையிலிருந்து மீட்டிருந்தாலும் தொழிலாளர் சந்தை தரவுகளின் படி வேலையின்மை கடுமையாக அதிகரித்துள்ளது. மற்றும் உழைப்புச் சந்தை பங்கேற்பு என்பது கடுமையாக சரிந்துள்ளதுடன் குறிப்பாக பெண்களின் வேலையின்மை அதிகரித்துள்ளது.

நீடித்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின்மையினால் இந்தியாவின் இளம் உழைப்புச் சக்திகள் வீணடிக்கப்படும் அபாயம் நிலவுகின்றது" எனச் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், அரச கட்டுப்பாடுகளில் எந்த ஒரு நிச்சயமும் இல்லாததால் முதலீடும் நுகர்வுச் சக்தியும் சரிந்துள்ளது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் இந்தியத் தலைவர் ரணில் சல்காடோ செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், "வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களின் கடன் விரிவாக்கச் சரிவு, பரந்துபட்ட அளவில் கடன் அளிப்பதில் இருக்கும் இறுக்கம் மற்றும் உள்ளார்ந்த சீர்த்திருத்த நடவடிக்கைகளில் ஒன்றான தேசம் முழுதுமான சரக்கு மற்றும் சேவை வரி அமுலாக்கத்தில் உள்ள குறைபாடுகள் ஆகியவையும் பொருளாதார தேக்கநிலைக்கு பங்களிப்புச் செய்துள்ளன.

ஒரு குறிப்பிடத்தகுந்த பொருளாதார தேக்கநிலைகளில் இந்தியா சிக்கியுள்ளது. இதனால் இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் அடுத்த ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி விகிதங்களை ஐ.எம்.எப். குறைத்துக் கணிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

மேலும் வளர்ச்சி இயந்திரத்தை மேலும் வலுவூட்ட வேண்டுமெனில் பொருளாதாரத்தில் நம்பிக்கை ஊட்டுவதற்கான வழிமுறைகள் வேண்டும்" என அவர் தெரிவித்தார். (ஜ-2)

## பேருந்து பள்ளத்

## 25 பேர் உயிரிழ

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவின் பாலம்பேங் பகுதியில், பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 25 பேர் பலியாகினர்..**

இந்தோனேசியாவின் தெற்கு சுமாத்ரா மாகாணத் தலைநகர் பாலம்பேங் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது.

பின்னர் சுமார் 500 அடி ஆழப் பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் பேருந்து கடுமையாக சேதமடைந்தது.

பேருந்தில் பயணம் செய்த 25 பேர் பலியாகினர். 13 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஜ-2)

## குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஆதரித்து பாகிஸ்தான் அகதிகள் பேரணி






(இஸ்லாமாபாத்)

குடியுரிமை திருத்த சட்டத்தை ஆதரித்து ராஜஸ்தானில் வாழும் பாகிஸ்தான் இந்து அகதிகள் பேரணி நடத்தினர்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் மத ரீதியாக துன்புறுத்தப்பட்டு இந்தியாவுக்குள் அகதிகளாக வந்த இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் பார்சிகளுக்கு குடியுரிமை வழங்க மத்திய அரசு சட்ட் திருத்தம் கொண்டு வந்துள்ளது.

இஸ்லாமியர்கள், இலங்கைத் தமிழர்களைத் தவிர்த்துப் பிற மதத்தினருக்கு மட்டும் ஆதரவாக இருக்கும் இந்த மசோதாவுக்குப் பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர். குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பா.ஜ.க. சார்பில், சட்டத்தை ஆதரித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், பாகிஸ்தானில் இருந்து வந்த இந்து அகதிகள் இந்த குடியுரிமை திருத்த சட்டத்தை ஆதரித்து நேற்று முன்தினம் பேரணி நடத்தினர்.

இப்பேரணி குறித்து அகதி ஒருவர் கூறும்போது, 'கடந்த 57 ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வருகிறோம். இதுவரை நாங்கள் குடியுரிமை பெறவில்லை. போதிய வசதிகளும் கிடைக்கவில்லை. இனி நாங்கள் சிறப்பாக வாழ இந்த சட்டம் உதவியாக இருக்கும்' என்றார். (ஜ-2)

## அன்பு வழியில் ஒற்றுமை

### கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியி

(சென்னை)

இயேசு பிரான் அவதரித்த திருநாளில் அன்பு வழியை அனைவரும் பின்பற்றி ஒற்றுமையுடன் வாழ உறுதி ஏற்போம் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கிறிஸ்மஸ் தின வாழ்த்து செய்தியில் தெரிவித்தார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்ததாவது,

அன்பின் திருவுருவாம் கருணையின் வடிவமாம் இயேசு பிரான் அவதரித்த தினமான கிறிஸ்மஸ் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் கிறிஸ்தவ மக்கள் அனைவருக்கும் எனது இனிய கிறிஸ்மஸ் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயேசுபிரான் பிறந்த இத்திருநாளில், கிறிஸ்தவ மக்கள் தங்கள் இல்லங்களின் வாசலில் வண்ண நட்சத்திரங்களைக் கட்டி, கிறிஸ்மஸ் மரம் மற்றும் இயேசுவின் பிறப்பை சித்திரிக்கும் குடில் அமைத்து, வண்ண மின் விளக்குகளால் அலங்கரித்து, புத்தாடை உடுத்தி, தேவாலயங்களில் நடைபெறும் சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டு, கர்த்தரை வழிபட்டு, உற்றார், உறவினர்களுடன் விருந்துண்டு, மகிழ்ச்சியு டன்

## பிரான்சில் வலுக்கும் பே

(பாரிஸ்)

பிரான்ஸில் அரசாங்கத்திற்கெதிரான போராட்டம் உச்சமடைந்துவரும் நிலையில் பத்தொன்பதாவது நாளாக நேற்று முன்தினம் போரர்ட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திங்கட்கிழமை காலை ரெகி ஆட்டோனோம் டெஸ் டிரான்ஸ்போர்ட்ஸ் பரிசியன்ஸ் தலைமைச் செயலகத்துக்கு முன்னால் நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மிகவும் அமைதியாக இடம்பெற்ற இந்த போராட்டத்தின் போது கார்-து-லியோன் நிலையத்தினை ஒட்டியுள்ள இந்த தலைமைச் செயலகத்தைப் போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர்.

பல்வேறு தொழிற்சங்கங்களின் கொடிகளை ஏந்தியிருந்த போராட்டக்காரர்கள் தங்களது



உரிமைகளுக்காக குரல் கொடுத்தனர். எனினும் இந்த போராட்டக்காரர்களால் வன்முறை எதுவும் பதிவானதாகத் தகவல்கள் எதுவும் இல்லை.

பிரான்ஸில் அரசின் ஓய்வூதியத் திட்ட சீர்திருத்தத்தை எதிர்த்து தேசிய ரீதியில் வேலை நிறுத்தம் மற்றும் போராட்டங்களை முன்னெடுக்க தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்ததற்கு அமைய கடந்த 5 ஆம் திகதி முதல் பிரான்ஸின்

## FATF இன் கறுப்புப் பட்டியலில் பாகிஸ்தான் கேள்விகளுக்கு பதிலளிக்க காலக்கெடு விதிப்பு

(இஸ்லாமாபாத்)

பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வழங்குவது தொடர்பாக பாகிஸ்தானுக்கு நிதி நடவடிக்கை கண்காணிப்பு அமைப்பு 150 கேள்விகளை எழுப்பியுள்ளது.

பிரான்சின் பாரிஸை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் FATF என்ற நிதி நடவடிக்கை கண்காணிப்பு அமைப்பு சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு நிதி உதவி அளிக்கப்படுவதை கண்காணித்து வருகிறது. இந்த அமைப்பின் கறுப்புப் பட்டியலில் பாகிஸ்தான் உள்ளது.

இந்தப் பட்டியலில் இருந்து விடுபட ஏற்கனவே 27 நிபந்தனைகள் விதிக்கப்பட்டதில் 22 நிபந்தனைகளை பாகிஸ்தான் நிறைவேற்றவில்லை. வரும் 2020 பெப்ரவரிக்குள் இவற்றை நிறைவேற்றாவிட்டால் கறுப்புப்பட்டியலில் பாகிஸ்தான் சேர்க்கப்படும்.

இந்த நிலையில், இந்த 22 நிபந்தனைகளை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை பாகிஸ்தான் அண்மையில் தாக்கல் செய்தது.

ஆனால், அதில் திருப்தி அடையாத நிதி நடவடிக்கை கண்காணிப்பு அமைப்பு பாகிஸ்தானிடம் 150 கேள்விகளை கேட்டுள்ளதுடன் அதற்கு ஜனவரி 8 ஆம் திகதிக்குள் பதிலளிக்கும்படி உத்தரவிட்டுள்ளது. (ஜ-2)

# வெளிநாடு



# ...த்தில் கவிழ்ந்து விபத்து
# ...ிழப்பு, 13 பேர் படுகாயம்





..., பயப
... கவி...
...கினர்...

...விபத்துக்குள்
...க சேதமடை

... பேர் பலியா
...ர். அவர்கள்
...னுமதிக்கப்பட்
... விசாரணை
(ஜ-2)

## சிரியாவில் ஏவுகணைத்தாக்குதல் மூன்று பேர் பரிதாபமாக மரணம்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் அரச ஆதரவு பெற்ற மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்நாட்டு தலைநகர் டமாஸ்கஸுக்கு தென்கிழக்கே அமைந்துள்ள அக்யூரபா பகுதியில் இத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் சிரிய அரசுக்கு ஆதரவாகப் போரிட்டு வந்துள்ளனர். அவர்கள் சிரியாவைச் சேர்ந்தவர்கள் அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் அரச ஆதரவுப் படை மற்றும் அரசுக்கு ஆதரவான ஈரானிய போராளிகளைக் குறிவைத்து இஸ்ரேல் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இதற்கு முன்பு கடந்த நவம்பர் மாதம் 20 ஆம் திகதி இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அரச ஆதரவுப் படையினர் 20 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ...றுமையுடன் வாழ்வோம்
## ...்தியில் எடப்பாடி பழனிச்சாமி

...யுடன்
...னைவ
... தின
...காள்கி

...ளில்,
...களின்
...் கட்டி,
...சுவின்
...மத்து,
...கரித்து,
...களில்
...கலந்து
...ற்றார்,
...ழ்ச்சியு



டன் கிறிஸ்மஸ் திருநாளைக் கொண்டாடி மகிழ்வார்கள்.

"வழி தவறிய ஆட்டை தேடிச் சென்று மீட்கும் மேய்ப்பன் போன்று, பாவம் எனும் முள்ளிடையே நிற்கும் மனிதர்களையும் தேடிச் சென்று மீட்பது என்னுடைய பணி" என்றுரைத்த இயேசுபிரான் அவதரித்த இத்திருநாளில், அத்திருமகனார் போதித்த அன்பு வழியை மக்கள் அனைவரும் பின்பற்றி வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் வாழ்ந்திட இந்த இனிய நாளில் உறுதி யேற்போம் என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# ஜமால் கசோக்கியை கொன்ற ஐவருக்கு மரண தண்டனை

(றியாத்)

துருக்கியில் உள்ள சவுதி அரேபியா தூதரகத்தில் ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி கொல்லப்பட்டதில் நேரடி தொடர்புள்ள 5 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

சவுதி மன்னர் சல்மானின் முடியாட்சியை கடுமையாக விமர்சித்து வந்த ஜமால் கசோக்கி (வயது-59) என்ற ஊடகவியலாளர் துருக்கி நாட்டின் தலைநகர் இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி தூதரகத்தில் வைத்து கொடூரமாகக் கொல்லப்பட்டார்.

சவுதி அரேபியாவைச் சேர்ந்த கூலிப்படையினரால் கசோக்கி



கொல்லப்பட்டார் என்று பல தரப்பிலும் எழுந்த குற்றச்சாட்டை சவுதி அரேபியா மறுத்து வந்தது.

எனினும், சர்வதேச அழுத்தத்துக்கு அடிபணிந்து ஜமால் கசோக்கி கொலை தொடர்பான விசாரணைக்கு சவுதி அரசு உத்தரவிட்டது.

இந்தக் கொலையில் சவுதி பட்டத்து இளவரசர் உட்பட 7 பேர் மீது றியாத் நகரில் உள்ள நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஜமால் கசோக்கி கொல்லப்பட்டதில் நேரடித் தொடர்புள்ள 5 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் பட்டத்து இளவரசர் உட்பட இருவர் இவ்வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் சவுதி அரேபியா அரசின் தலைமை சட்டத்தரணி நேற்று முன்தினம் தெரிவித்தார். (ஜ-2)

# ...் போராட்டம்!



...ர். எனினும்
...றை எதுவும்
...இல்லை.
...தியத் திட்ட
...யில் வேலை
...முன்னெடுக்க
...விடுத்ததற்கு
... பிரான்ஸின்

பல்வேறு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால் ரயில்வே, மெட்ரோ ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் எனப் பல பொது இடங்கள் முடங்கிப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# கனடாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(ஒட்டாவா)

கனடாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளதாக இந்திய ஊடகமொன்று தெரிவித்தது.

கனடாவின் மேற்கு கடற்கரைப் பகுதியிலேயே 6.0 ரிக்டர் அளவிலான இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. குறித்த நிலநடுக்கம் பதிவாகுவதற்கு முன்னர் இதே பகுதியில் சில மணிநேரங்களுக்கு முன்னர் 5.7 மற்றும் 5.2 என்ற ரிக்டர் அளவுகளில் இரு நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என அறியக் கிடைத்துள்ள போதும் நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. (ஜ-2)

# இந்தோனேசியாவில் குகைக்குள் சிக்கி பல்கலை.மாணவர்கள் மூன்று பேர் உயிரிழப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் உள்ள குகையில் வெள்ள நீரில் சிக்கி பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்ட தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையில் இந்தோனேசியா மேற்கு ஜாவாவில் உள்ள லெலே குகையில் இருந்து ஐந்து பேரை உயிருடன் மீட்டுள்ளார்கள்.

மீட்புக் குழுவினர் தரைமட்டத்திலிருந்து 30 மீற்றர் கீழே உள்ள குகைக்குள் செல்ல ஒரு மணி நேரம் பிடித்தது என்று மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகத்தின் இயற்கைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பகுதி மாணவர்கள் குகையில் அடிப்படை பயிற்சி பெற அங்கு



சென்றனர். மாணவர்கள் குகைக்குள் நுழைந்தபோது வானிலை இயல்பாக இருந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக பெய்த மழையானது அந்தப் பகுதியைத் தாக்கியது என இயற்கை கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும் "குகைக்குள் நீர் ஒரு நீர்வீழ்ச்சி போல புகுந்தது. ஆரம்பத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட ஐந்து மாணவர்கள் மட்டுமே குகைக்குள் இருந்தனர்." ஏனைய 3 மாணவர்களும் உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர் எனத் தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் நவம்பர் பிற்பகுதியில் மழைக்காலம் தொடங்கியதுடன் மேற்கு ஜாவா உட்பட இந்தோனேசியாவின் பல பிராந்தியங்கள் கடந்த இரண்டு வாரங்களில் சீரற்ற வானிலை மற்றும் புயல்களால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சம்பிக்கவின் சர்ச்சைக்குரிய வாகன விபத்து தொடர்பாக பூஜிதவிடம் சிறையில் விசாரணை



(கொழும்பு)

வாகன விபத்தொன்றையடுத்து, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி சாரதியை மாற்றி, உண்மையை மறைத்து சாட்சியங்களைச் சோடித்து நீதித்துறைக்கு மோசடி செய்தமை தொடர்பிலான குற்றச்சாட்டில் கைதான முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க விவகாரத்தில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவிடம் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சிறையில் வைத்து அவரிடம் இவ்விசாரணைகளை முன்னெடுக்க சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர், கொழும்பு மேலதிக நீதவான் லோச்சனீ அபேவிக்கிரமவின் அனுமதியை நேற்றுப் பெற்றுக் கொண்டனர்.

இவ் விவகாரம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று இது தொடர்பில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனூடாக அது குறித்த மனு மேலதிக நீதவான் லோச்சனீ அபேவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் சார்பில் அதன் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் டி சில்வா, பிரதான பொலிஸ் பரிசோதகர் பெர்னாண்டோ ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இந் நிலையில் இவ் விவகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் டி சில்வா மன்றுக்கு விடயங்களை முன்வைத்தார்.

2016 ஆம் ஆண்டு சந்தீப் சம்பத் என்ற இளைஞனை விபத்துக்குள்ளாக்கியமை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க வழங்கிய வாக்கு மூலத்திற்கமைய சில விடயங்கள் தெரிய வந்துள்ளன.

அப்போதைய மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட பூஜித ஜெயசுந்தரவின் தொலைபேசி, சந்தேக நபரான முன்னாள் அமைச்சர் சம்பிக்கவின் தொலைபேசியுடன் சம்பவத்தையடுத்து தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டுள்ளமை தெரிய வந்தது.

இந்த வழக்கு விசாரணைகளைத் தொடர, 20 சிம்காட்டுகளுடன் தொடர்புடைய தொலைபேசிகளின் அறிக்கைகளைப் பெற வேண்டியுள்ளது. சந்தேக நபரின் வாக்குமூலத்திற்கமைய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரியவந்தது.

இந்நிலையில் நாளை 26 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரை அவரிடம் வாக்குமூலம் பெறவேண்டியுள்ளது. அதற்கான அனுமதியை வழங்கவும் என பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் டி சில்வா கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தெற்கு அதிவேக வீதியில் விபத்து; 3 இந்தியர்கள் உட்பட நால்வர் பலி!

## இருவர் படுகாயம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் நால்வர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக வீதியின் வெலிப்பன்ன - குறுந்து கஹ ஹெத்தெம்ம பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் 3 இந்தியர்கள் உள்ளிட்ட நால்வர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

வான் ஒன்று கொள்கலன் வாகனத்துடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது. இவ் விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# தொழிலதிபர் சடலமாக மீட்பு!

## விடுதியில் கேட்ட துப்பாக்கிச் சத்தம்

(கதிர்காமம்)

கதிர்காமத்திலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றிலிருந்து, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் தொழிலதிபர் ஒருவரின் சடலத்தை கதிர்காமம் பொலிஸார் மீட்டனர்.

குறித்த சடலத்தை நேற்று முன்தினம் காலை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை, பகினிகா வெலயைச் சேர்ந்த கே.எம். சமந்த கோணார (வயது-47) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் தங்கியிருந்த அறையிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் துப்பாக்கிச்சூட்டு சத்தம் கேட்டதாகவும் விடுதி ஊழியர்கள் சத்தம் கேட்ட அறையை ஜன்னல் வழியாகப் பார்த்த போது மேற்படி நபர் சடலமாகக் கிடந்ததாகவும் தெரிய வருகிறது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டனர்.

இவரது மரணம் குறித்து, கதிர்காமம் நீதவான் நீதிமன்ற நீதவான் கிறிசாந்த அபேசிங்க, ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை அம்பாந்தோட்டை அரசினர் வைத்தியசாலையின் பிரேத அறைக்கு அனுப்பி, சட்ட வைத்திய அறிக்கையைப் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கதிர்காமம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேற்படி நபர் ஐந்து நாள்களுக்கு முன்னர் குறித்த அறையில் தங்குவதற்காக வந்திருந்ததாக முதற்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சீதையின் சிரிப்பு

அசோக வனத்திலே ஒரு மரத்தின் மேலே அனுமார் உட்கார்ந்திருந்தார். சீதையைப் பார்க்கிறதுக்காக இராவணன் வருகிறான். என்னென்னமோ சொல்லிப் பார்க்கிறான். நதியின் பிரவாகம் இருக்கே. அது போனது போனதுதான்! இளமையும் அப்படித்தான்.

போனாத் திரும்பி வராது! உன்னோட யௌவனத்தையும் ஏன் இப்படி வீணாக்கிக் கொண்டு இருக்கிறாய்! என்னைக் கல்யாணம் செய்து கொண்டு சந்தோசமாக இருக்க வேண்டியதுதானே என்றான். இந்த தகாத வார்த்தைகளைக் கேட்டதும்... யாருக்கும் கோபம் வருவது இயல்பு. ஆனா சீதை ஒரு தும்பை அவன் முன்னாடி போட்டு புன்சிரிப்போட அவனுக்குப் பதில் சொல்கிறதாக வால்மீகி எழுதியிருக்கிறார்.

இந்த இடத்தில் நமக்கு ஒரு சந்தேகம்! இந்த சமயத்திலே.. சீதை முகத்திலே புன்சிரிப்பு வருவதற்கு என்ன காரணம்? இந்த சந்தேகத்தைப் பக்திப் பிரசங்கம் செய்யும் ஒருவர் தீர்த்து வைக்கிறார். எப்படித் தெரியுமா? சீதா கல்யாணம் நடந்த சமயத்திலே பரம சிவனுக்கு அழைப்பு அனுப்பவில்லையாம். ஏன் தெரியுமா? விலாசம் கிடைக்கவில்லை. அவர்தான் இங்கேயும் இருக்கிறவராச்சே! எந்த விலாசத்துக்கு என்று பத்திரிகை அனுப்ப முடியும்? அதனாலே என்ன செய்வது என்று தெரியாமலே இருந்து விட்டார்களாம். ஆனா பரமசிவன் சும்மா இல்லை! பத்திரிகை வரவில்லை என்றால் கூட சீதைக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டவுடன் வந்து சேர்ந்துவிட்டார்.

ஆனா பாருங்கோ அவர் வந்து சேருவதற்குள்ளே கல்யாணம் முடிந்து போய்விட்டது. மணமக்கள் எல்லோர் காலிலேயும் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு இருந்தார்கள். அந்த நேரம் பார்த்து பரமசிவன் வந்து சேர்ந்தார். உடனே இராமரும் சீதையும் அவர் காலிலே விழுந்து வணங்கினார்கள்.

சீதை பரமசிவனைப் பார்த்து நீங்க எங்களுக்கு ஒரு பரிசும் கொடுக்க வேண்டாம். தங்களுடைய ஆசி மட்டும் எங்களுக்கு இருந்தால் போதும் என்றார்களாம். ஏன் பரிசு வேண்டாம் என்று சொல்கிறாய்? என் கையிலே ஒரு பொருளும் இல்லையே என்கிறதைப் பார்த்து விட்டு அப்படி சொல்கிறீரா என்று கேட்டார் பரமசிவன். அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்.

உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாமே என்பதற்காக அப்படி சொல்கிறேன் என்றார்கள். அப்படியெல்லாம் நினைத்து விடாதையுங்கள். என்னிடம் மிக உயர்ந்த பொருள் ஒன்று இருக்கிறது. அதை உனக்குப் பரிசாக கொடுக்கப் போகிறேன் என்றார் அவர். என்னுடைய புன்சிரிப்பு என்றார். அது எப்படி விலை உயர்ந்த பொருளாகும் என்று கேட்டார்கள். ஏன் ஆகாது? என் சிரிப்பைக் கண்டுதான் திரிபுரம் எரிந்தது தெரியுமா? அதை உனக்குப் பரிசாகக் கொடுக்கிறேன் என்றார்.

இப்படி அப்போது வாங்கிய அந்தப் பரிசுதான் இன்றைக்கு அசோக வனத்திலே சீதைக்கிட்டே இருந்தது. இராவணனுக்கு முன்னாடி ஒரு துரும்பைப் போட்டுட்டுச் சீதை புன்முறுவலோட பதில் சொன்னதாக எழுதியிருக்கிறதுக்கு இதுதான் காரணம். அந்த சிரிப்பு திரிபுரத்தை எரித்தது. இந்த சிரிப்பு இலங்கையை எரிக்கப் போகிறது என்பதைக் காட்டுவதற்குத்தான் சீதை முகத்திலே சிரிப்புத் தெரிந்தது. அப்படி என்று விளக்கம் கொடுக்கிறார் அந்தப் பெரியவர். ஆகக் கவுடி சிரிப்பிலே கூட எவ்வளவு அர்த்தம் இருக்கிறது பாருங்கள்.

நம்ம ஆள் ஒருவர் ஒரு நாள் ரொம்ப சாவகாசமாக முகத்திலே புன்முறுவலோட வந்து கொண்டிருந்தார். என்ன சேர் விடயம் உங்கள் முகத்திலே தெரிகிற புன்முறுவலுக்கு என்ன காரணம் என்று அவரிடமே கேட்டேன். வைக்கோல் தீப்பிடித்து எரிகிறது சேர். அதுதான் இப்படி வந்து கொண்டிருக்கிறேன் என்றார். என்ன சேர் இது... அதை இவ்வளவு சாதாரணமாக எடுத்துக் கொள்கிறீர்கள். உடம்பு பதற வேண்டாமா? என்றேன். எதுக்குப் பதற வேண்டும். எரிகிற வைக்கோல் போர் என்னுடையது இல்லையே. எதிர் வீட்டுக்காரனது என்றார்.

## வடக்கில் கூட்டமைப்பு சரிவடைந்து செல்கிறது

# பொதுத்தேர்தலுக்கு முன்னர் புதிய கட்சிகள் உருவாக வாய்ப்பு

## டியூ.குணசேகர எதிர்வுகூறல்



(கொழும்பு)

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரிவடைந்து செல்கின்றது. பொதுத்தேர்தலுக்கு முன்னர் புதிய கட்சிகள் பல உருவாக வாய்ப்பிருக்கின்றது. அதனால் வடக்கு-கிழக்கிற்கு தேசிய மட்டத்தில் முன்னுரிமை வழங்கி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன்மூலமே இந்தப்பகுதி மக்களின் உள்ளங்களை வெற்றி கொள்ள முடியும் என இலங்கை கம்யூனிஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ.குணசேகர தெரிவித்தார்.

சோசலிச மககள் முன்னணி கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமிழந்து புதிய கட்சிகள் தேர்தலுக்கு முன்னர் உருவாக இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் எங்களுக்கு 5 வீத வாக்குகளும் கிழக்கில் 22 வீத வாக்குகளுமே கிடைக்கப்பெற்றதாகத் தெரிவித்துக்கொண்டு சும்மா இருந்துவிட முடியாது. வடக்கு-கிழக்கிற்கு தேசிய மட்டத்தில் முன்னுரிமை வழங்கி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமே அந்த மக்களின் உள்ளங்களை வெற்றி கொள்ள முடியும்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாகவே செயற்பட்டு வருகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் மேற்கொண்ட பிரசாரங்கள் தற்போது பொய்ப்பித்து வருகின்றன.

அதனால் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்பாக இருந்துவந்த நம்பிக்கை குறைவடைந்து வருகின்றது. அதன் விளைவாகவே அங்கு புதிய கட்சிகள் உருவாக வேண்டும் என்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய பல வேலைத்திட்டங்கள் இருக்கின்றன. விசேடமாக பெரும்பாலான மக்கள் வறுமை நிலையில் இருக்கின்றனர். அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு காரணங்களால் விதவைகளான 65 ஆயிரம் பெண்கள் இருப்பதாக கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்திருக்கின்றார். இது கவனம் செலுத்தப்படாமல் இருக்கும் விடயமாகும்.

அத்துடன் தற்போது இடம்பெறும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தில் இருக்கும் உறுப்பினர்கள் தேவையற்ற கருத்துக்களை ஊடகங்களுக்கு தெரிவிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவர்களில் சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கையால் இல்லாத பிரச்சினைகள் தலைதூக்க ஆரம்பிக்கின்றன. குறிப்பாக ஊழல் மோசடி தொடர்பான சட்ட நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொள்ளும் போது அது தொடர்பாக எமது உறுப்பினர்கள் தேவையற்ற முறையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க முற்படுகின்றனர்.

இவ்வாறு கருத்துத் தெரிவிக்க முற்படுபவர்களில் அதிகமானவர்களுக்கு ஊழல் மோசடி குற்றச்சாட்டு இருக்கின்றது. அதனால் ஊழல் மோசடி குற்றச்சாட்டு இருப்பவர்கள் தங்கள் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலையாகும்வரை இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இவர்களின் நடவடிக்கையால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சுற்றி வளைப்பில்

# கைது செய்யப்பட்டோரிடம் 17 கோடி ரூபாய் அபராதம்

(கொழும்பு)


கலால் திணைக்களத்தால் கடந்த 11 மாதங்களில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தால் 17 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் கடந்த 11 மாத காலத்தில் 30 ஆயிரத்து 902 சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது 42 ஆயிரத்து 979 பேர் கலால் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக 17 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக, அத்திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கபில குமார சிறி தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது 50 கோடி ரூபாய் பெறுமதியான அனுமதிப் பத்திரங்கள் இன்றி பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபான வகைகள் மற்றும் உபகரணங்கள், சட்டவிரோத புகையிலை உற்பத்திப் பொருட்கள் மீட்கப்பட்டதாக கலால் திணைக்கள வட்டாரங்கள் மேலும் சுட்டிக் காட்டின. (இ-7)

# மின்சார துறையின் எதிர்கால திட்டத்தை தீர்மானிப்பதற்கு புத்திஜீவிகள் குழு



(கொழும்பு)

மின்சாரத் துறையின் எதிர்காலத்திட்டத்தை தீர்மானிப்பதற்கு புத்திஜீவிகள் குழுவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மின்சக்தித் துறையின் புத்திஜீவிகள் மற்றும் மதத் தலைவர்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாக சம்பந்தப்பட்ட குழு பெயரிடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அமைச்சர் நேற்று முன்தினம் காலை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது இந்தக் குழுவிற்கான பிரதிநிதியைப் பெயரிடுமாறு அமைச்சர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எதிர்கால மின்சாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது தாம் ஆகக் கூடுதலான ஒத்துழைப்பை வழங்குவதாக அமைச்சரிடம் தெரிவித்தார்.(இ-7)

# கூடுதல் விலைக்கு அரிசியை விற்பனை செய்த 450 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு அரிசியை விற்பனை செய்த 450 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நாடு முழுவதும் சுமார் 13 ஆயிரம் வர்த்தக நிலையங்களில் நுகர்வோர் விவகார அதிகார சபையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவ்வாறு 450 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு-பதுளைக்கிடையில் விசேட புகையிரத சேவை

(கொழும்பு)

கொழும்பு மற்றும் பதுளைக்கிடையில் விசேட புகையிரத சேவை இடம்பெறவுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு சபை தெரிவித்தது.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு விடுமுறை நாட்களை கருத்திற்கொண்டே குறித்த புகையிரத சேவை இடம்பெற்றது. (இ-7)




வலிகாமம் கிழக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இளைஞர் அணியினர் கடந்த 22 ஆம் திகதி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.
(படங்கள்:-மகாலிங்கம்)

# அவர்களுக்குத் தேவை இயேசு கிறிஸ்துவே இதை எப்போது கொடுக்கப் போகின்றோம்



ம.பிரான்சிஸ்க்
சுதந்திர கத்தோலிக்க ஊடகவியலாளர்,
ஊடகக்கற்கை நெறி ஆசிரியர்.

சுவாமி அபிஷேக்தானந்தா என்னும் ஒரு கத்தோலிக்க குருவானவர் அன்றொருநாள் ஓர் இந்து சந்நியாசியைச் சந்தித்த போது, அந்த சந்நியாசி உங்கள் கிறிஸ்தவ மிசனரிகள் கல்வி, மருத்துவம், சமூக நீதி போன்ற பணிகளை மக்களுக்குக் கொடுத்திருப்பது மிக்க மகிழ்ச்சிதான். ஆயினும்தேவையானது ஒன்றே. மக்கள் கடவுளைக் காண பசியோடு இருக்கிறார்கள். இயேசு தவிர எல்லாவற்றையும் கொடுக்கிறீர்கள். அவர்களுக்குத் தேவை இயேசு கிறிஸ்துவே.

இதை எப்போது கொடுக்கப் போகிறீர்கள்? என்று கேட்டாராம். இந்த வரிகள் இந்த கிறிஸ்து பிறப்பு விழாவில் கட்டாயம் சிந்திக்க வேண்டிய வரிகள். நாம் இயேசுவை விட்டுவிட்டு மற்றையனைத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றோமா?


இந்த வரிகளை சிந்தித்தால் இன்று எமது சிறார்களுக்கு சிறு வயதிலிருந்து மறைக்கல்வி சிறந்த முறையில் கற்றுக் கொடுக்கப்படவில்லை என்று தான் சொல்ல வேண்டும். கண்களுக்கு நல்லவற்றைப் பார்க்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம், மறைக்கல்வி என்ற இறையறிவு எங்களில் உருவாக்கப்படவில்லை என்று கூறலாம்.

மறைக்கல்வி அப்படி என்ன தான் கற்பிக்கின்றது. சிறுவர்களுடைய அறிவு, திறன், மனப்பாங்கு மாற்றத்தை வளர்ப்பது மனிதனாக்குவது கல்வியே. ஆனால் மறைக்கல்வி குழந்தையின் ஞானத்தை வளர்க்கிறது. ஒழுக்கத்தை ஓங்குயரச் செய்கிறது. இத்தகைய மறைக்கல்வியின் மாண்பினைப்பிள்ளைகளும் பெற்றோரும் உணர வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். அப்போதுதான் எமது நாட்டையும் வளம் செழிக்கும் நாடாக மாற்ற முடியும்.

இன்றைய மனிதனின் மன நிலைகளை சற்று நோக்கினால் தனக்குரியது தனக்கு என்றும், அதுமட்டுமல்ல உனக்குரியதும் உனக்கு அல்ல தனக்கே என்பது எங்கும் பரந்து விரிகிறது தெளிவாகும். மனிதனின் மனப்பாங்கு நிலையை மாற்ற வழிகாட்டுவது கல்வியின் நோக்கங்களில் ஒன்று. ஆனால் இயேசுவின் மனநிலையை அடைய எமக்கு வழிகாட்டுவது மறைக் கல்வியின் நோக்கம். அதாவது, எனக்குரியதும்.

**உனக்கே என்னும் மன நிலையை அடையவழிகாட்டுவது.**

எனவே சிறார்கள் கிறிஸ்துவின் மனநிலையைச் சிறுவயதிலிருந்து பற்றிக்கொள்ள மறைக் கல்வி இன்றியமையாதது. மனிதனின் மனநிலையும் கிறித்துவின் மனநிலையும் வேறுபாடு கொண்டவை. மனிதனின் மன



நிலையைவிட உயர்ந்தே கிறிஸ்துவின் மனநிலை. மனிதனின் மனநிலையை அடைய துணை புரிவது மனிதக்கல்வியின் நோக்கம். சிறுவர்கள் கிறிஸ்துவின் மன நிலையைப் பற்றிக்கொள்ள செய்வதே மறைக்கல்வியின் முழுமையான நோக்கம் எனக் கூறலாம்.

**இயேசுவின் முன்னுதாரணம்**

மறையாசிரியர்களுக்கு இயேசுவைத் தவிர வேறு யாரும் ஒரு சிறந்த முன்னுதாரணம் எங்கும் இருக்க முடியாது. இயேசு எப்படி முன்னுதாரணமாய், சிறந்த மறைக் கல்வியாளராய் இருக்கிறார் எனின் அவர் சிறுவர்களையும் ஏற்றுக் கொண்டார் என்பதில் தெளிவாகுகிறது. சிறு பிள்ளைகளுக்கு என்ன தெரியும்? என்று அலட்சியத்தோடு அப்போஸ்தலர்கள் அதட்டியபோது, இயேசு, சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்: பைபிளில் உள்ள லூக்கா புத்தகத்தில் 18 அதிகாரம்:16 வசனம் தெரிவிக்கின்றது. (லூக்18:16) என்று அழைப்பு விடுத்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். இயேசு தன் வாழ்வில் கோபம் அடைந்த சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று. சிறுபிள்ளைகளும் முக்கியமானவர்கள் என்பதைச் சீடர்களுக்கு உணர்த்தும் வகையில் அவர்களுக்குக்கதைகள் கூறி தமது நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

**சிறுவர்கள் சிறிய மனிதர்கள் அல்ல**

சிறுவர்கள் சிறிய மனிதர்கள் அல்ல. மாறாக சிறுபிள்ளைகள் என்னும் மனநிலையை எமது மனதில் ஆழமாக பதித்து அவர்களை நெறிப்படுத்தி வளப்படுத்தி வளர்ப்போமானால் பாரில் பிரச்சினையே உருவாகாது என்பது எமது நம்பிக்கை. சிறுவர்களுக்குரிய விளையாட்டுப் பொம்மைகள், இனிப்பு வாங்கிக் கொடுத்தல், உணவு, உடை, தலைமுடி அலங்காரம் செய்தல் மட்டுமே அவர்களை ஏற்றுக் கொண்டு அன்பு செய்வது என்று எண்ணுகிறார்கள் பெற்றோர்கள். சிறுவர்களுக்குத் தேவையான ஞானத்தையும் மறையறிவை வழங்கக் கூடிய மறைக்கல்வியும் இன்று மிக முக்கியமாக அவசியம் என்பதை எமது பெற்றோர்கள் உணர வேண்டும். மறைக்கல்விக்குப் சிறுவர்கள் போவதால் கடவுள் தனது அருளையும் -ஆசீர்வாதத்தைத் தனக்கு வழங்குவார் என்பதை சிறுவர்கள் உணரச் செய்ய வேண்டும். கடவுளின் பிரதிநிதிகளாக ஏற்று அவர்களுக்காக நேரம் ஒதுக்க வேண்டும்.

**மறையாசிரியரும் மறைக்கல்வி வகுப்பும்**

மறையாசிரியர்கள் எளிமையாக மறைக்கல்வி வகுப்பை எடுக்க வேண்டும். இயேசு புரியாத வகையில் ஒருபோதும் பேசியதில்லை. மக்களுக்கு எளிமையாகப் புரிகின்ற வகையில் உப்பு, ஒளி, அப்பம் மீன்,கடுகு, புளிப்புமாவு, அத்தி மரம் விதை, வலை பறவைகள், பன்றிகள், முத்துக்கள் என்று உருவகக்கதைகள், உவமைகள் வழியாகப்பேசினார். தனக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்பவன் பெரியவனல்ல. மாறாக எளிமையாக புரிகின்ற வகையில் பேசுபவனே சிறந்த பேச்சாளன்...என்கிறார் ஜான் மில்டன். இதை ஒத்து மறையாசிரியர்கள் புரியாத வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நகைச்சுவை, கதைகள், விடுகதைகள், நாட்டார் பாடல்கள் மூலமாக சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

**கற்றுக்கொடுப்பதை வாழ்வாக்குதல்**

போதிப்பவர் பலர். வாழ்பவரோ சிலர். அந்த சிலரே போற்றுதற்குரியவர்; என்று கூறுவார் பெர்னாட்சோ.

இயேசு எளிமையாக வாழ்ந்தார், உண்மையை உரக்கச்சொன்னார். அதனால் மக்கள் கூட்டம் அலையலையாய் அவரைத் தேடி வந்தது. போதிப்பது ஒன்று, செய்வது ஒன்றாக இருந்தால் சிறுவர்கள் மறையாசிரியர்களால் ஈர்க்கப்பட மாட்டார்கள். மீண்டும் மறைக்கல்வி வகுப்பிற்கு வர மாட்டார்கள்.

**சமூக வலைத் தளங்களும் மறைக்கல்வியும்**

சமூகத் தொடர்புக் கலையை பயன்படுத்துவதால் அவர்கள் தீமைக்கு உள்ளாகாமல், உலகுக்கு உப்பாகச் சுவையூட்டி, ஒளியாக விளங்குவார்கள். மனித சமுதாயத்தின் எதிர்காலம் இத்துறையைச் சரியாகப் பயன்படுத்துவதில் அடங்கியுள்ளமையால், மனித நலனுக்காகவே இதனைக் கையாள வேண்டும் "(இரண்டாம் வத்திக்கான் சங்கம் புத்தகம், சமூக தொடர்பு கருவிகள், எண்:24) உலகச்செய்திகளைக் சிறுபிள்ளைகளுக்கு வழங்குவதற்கு எத்தனையோ தளங்கள் இருக்கின்றன.

இன்றைய உலகின் தொழில் நுட்ப வளர்ச்சிக்கான ஓர் அடையாளமாய் உருவெடுத்துள்ள வானொலி, காட்சிவானொலி, இதழ்கள், செய்தித்தாள், திறன் அலைபேசி, சமூக ஊடகங்கள் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. இச்சாதனங்கள் உறவுகளை வளர்க்க ஊடாடவேண்டிய சாதனங்களாக சிறுவர்கள் பயன்படுத்த மறைக்கல்வி வழிகாட்ட வேண்டும். மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேருக்குநேர் சந்திப்பதே உண்மையான சந்திப்பு என்பதை மறைக்கல்வி சிறுவர்களுக்கு உணர்த்தி இத்தகைய சந்திப்பிற்கு இத்தொடர்பு சாதனங்களும் சமூக வலைத் தளங்களும் சரியான வழிகாட்டலை செய்ய மறைக்கல்வி கற்பிக்கவேண்டும். சமூக வலைத் தளங்கள், நம்மைத்தனிமைப் படுத்தாமல், தனித்திருக்கும் நபர்களோடு.-ஒருவரோடு ஒருவர் தொடர்புகளை ஏற்படுத்தி இணைக்கவும் நாம் கூடிவந்து செபிக்கவும், ஒருவருக்கொருவர் உதவுவதற்குப் அவற்றைப் பயன்படுத்த மறைக்கல்வியில் கற்றுத்தரப்பட வேண்டும்.

அப்போதுதான் தொலைபேசி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி மனிதர்களையும் மனங்களையும் இணைத்த மார்ட்டின் கூப்பரின் கண்டுபிடிப்பு வளம் பெறும்.

எனவே சிறுபிள்ளைகளின் அறிவுத் திறமைளை, ஆற்றல்களைப் மனப்பாங்குகளைப் பன்முகப்படுத்தி, ஒருங்கிணைத்து தனிமனித, சமூக, மாண்பையும் இறையாண்மையையும் பரிணமிக்கச் செய்து பாதுகாக்கச் செய்யும் இயக்கச்சக்தியே மறைக்கல்வி என்பதை நன்குணர்வோம்.

இயேசு எம்முள்ளும் நாம் அவருள்ளும் வாழ்வதற்குரிய மனநிலையை- கிறிஸ்து மனநிலையை மறைக் கல்வி கற்றுத்தர வேண்டும். மறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து எம் சிறுபிள்ளைகளை இந்த கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு அனுப்புவோம்.

# மாட்டுத் தொழுவமா?

இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீது ஊரில் பிறந்திருக்கிறார். (லூக் 2:10-11)

**பூக்கள் குடியிருக்க கிளைகளுண்டு - சிறு புல்லிருக்க நிலமுண்டு - ஈக்கள் குடியிருக்க கூடும் உண்டு–இங்கே இயேசு பிறக்க வீடு இல்லையே!**

**புலிகள் குடியிருக்க குகைகள் உண்டு - பூங்கிளிகள் குடியிருக்க பொந்தும் உண்டு - இங்கே இயேசு பிறக்க வீடு இல்லையே!**

**மாடு குடியிருக்க தொழுவம் உண்டு–பாம்பு மடிந்திருக்க புற்றுகள் உண்டு–ஓடும் குதிரைக்கும் இலாயம் உண்டு–இங்கே இயேசு ஓய்ந்திருக்க ஓர் வீடு இல்லையே!**

நிகரில்லாத்தேவன் உரோமாபுரியில் பிறக்கவில்லை. வேறு எந்த தலை சிறந்த தலைநகரங்களிலும் பிறக்கவில்லை. பெத்தலகேமின் ஊருக்குள்ளும் பிறக்க இடமில்லை. சத்திரத்திலும் இல்லை இடம். சாவடியிலும் இல்லை இடம். பஞ்சு நிறை மஞ்சத்தில் பிறக்கவில்லை.

வரவேற்பும் ஏதும் இல்லை. கொட்டும் மேளம் இல்லை, பந்தல் தோரணமில்லை. வரவேற்பு உரை இல்லை. வாண வேடிக்கை இல்லை. வாழ்த்துரையில்ல. மாலை சூடவில்லை. மக்கள் கூட்டமில்லை. ஊரே உறங்குகின்றது. இக்கட்டான வேளையில் தாய் மரியாள் வீடு வீடாகச் சென்று தட்ட வேண்டுமா? இடம் இல்லை என்று சொல்லி தம் உறவினர் கூட தத்தம் வீட்டுக் கதவுகளை அடைப்பதைப் பார்த்து கூனிக் குறுக்கிப் போகவில்லை தாய் மரியாள்.

இச் சூழ்நிலையிலும் ஐயமற்ற நிலை தான் விசுவாசம் என்பதை மரியாள் உணர்ந்திருந்தார். விசுவாசித்தார். மாட்டுத் தொழுவத்தில் நடுங்கும் குளிரில் சாதாரண மானிடராக சரித்திர நாயகன் தரித்திரக் கோலத்தில் தரணிக்கு வந்தார்.

உலகைப் படைத்த இறைவனுக்கு பிறக்க இடமில்லை. ஆனால் மனிதனைத் தேடி வந்தார் மாபரன் இயேசு. அவர் நம் இதயங்களில் வந்து பிறக்கும் போது அன்று வானதூதர்கள் பாடியதைப் போல் நாமும் உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோர்க்கு அமைதி உண்டாகுக! என்று பாடிடுவோம்.

மரியதாஸ் விக்ரோறியா
குருநகர்.

## இயேசு எந்தன் குழந்தையே...

இயேசு எந்தன் குழந்தையே
இன்பமான ரட்சகரே
பாசமான உள்ளத்தில்
பாவந் தீர்க்கும் பாலனே

உலகிலுள்ளோர்க்கு சூரியனே
ஊனமுற்றோர்க்கு உறவினரே
விண்ணையும் மண்ணையும்
விரும்பிக் காக்கும் பாலனே


அன்னை புதின மரியாளின்
அருமைப் புதல்வனே
அருமையான முறையில்
அனைத்துயிரையும் காத்திடும் பாலனே

இயேசு எந்தன் பாலனே
எல்லா இன்பமும் தந்து
எம்மைக் காத்திடு பாலனே

எம்.ஆர்.கலீபன், புத்தூர்.

## சுயநலத்தை விடுத்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி

# உண்மையான அமைதி நிலவ எல்லோரும் ஒத்துழையுங்கள்



## யாழ்.ஆயர் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

2019 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா உலகம் முழுவதிலும் இன, மத, நிற, மொழி போன்ற வேறுபாடுகளின்றி அனைத்து மக்களாலும் கொண்டாடப்படும் வேளை கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் உண்மையில் மகிழ்ச்சி அடைகின்றோம் என யாழ்.ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார். அவர் விடுத்துள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில்,

இந்த பெரு விழாவின் போது உலக கத்தோலிக்க திருச்சபை முழுவதிலும் பரந்து வாழும் மக்களால் பல்வேறு மொழிகளில் பாடப்படும் ஒரே இறைவார்த்தைப் பாடல் "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் நன்மனத்தோர்க்கு அமைதி உண்டாகுக!" (லூக். 2: 13-14) என்பதாகும்.

நல்மனம் இன்று எம் மத்தியில் அருகிக்கொண்டு போகின்றது. உண்மையான அமைதிக்கு, நல்ல மனம் வேண்டும். எங்களிடத்திலே போட்டி, பொறாமை, மற்றவர்களை இழுத்து விழுத்தும் செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

மற்றவர்களை அன்பு செய்தல், அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவித்தல், மன்னித்து வாழுதல் போன்றன அருகிக்கொண்டு போகின்றன. நமது குடாநாட்டில் மக்களுக்கு சேவை என்ற போர்வையில் ஒருவரை ஒருவர் எதிர்த்து வாழ்வதுதான் நிஜம்.

தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக தங்களின் சுயநலத்தை விட்டுக்கொடுத்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி உண்மையான அமைதி நிலவ எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

காணாமல் போனோர் விடயம், அரசியல் கைதிகள் விவகாரம், மீள்குடியேற்றம், வேலையற்றோர் பிரச்சினை போன்றவற்றை முன்வைத்து செயற்பட அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

பாலகன் இயேசு இவ்வுலகிற்கு வந்து மக்களின் மனங்களில் அன்பு, பொறுமை, மன்னித்தல் போன்றவற்றின் மூலம் உண்மையான அமைதியை அடையலாம் என்பதை எமக்கு வாழ்ந்து காட்டி இருக்கின்றார்.

இதையே நாங்களும் இந்த கிறிஸ்து பிறப்பு காலத்திலே மற்றவர்களோடு, விசேட விதமாக ஏழைகளிடத்தில், பகிர்ந்து வாழ்ந்து அமைதியை நிலைநாட்ட வேண்டும்.

இந்த பெருவிழாக்காலத்தில் கடவுளை மாட்சிப்படுத்தி, அவருக்கு உகந்தவர்களாக வாழ்ந்து, அமைதியை நிலைநாட்டும் மக்களாக மாற இறைவன் உங்களுக்கு துணை புரிவாராக. பிறக்க இருக்கின்ற பாலகன் இயேசுவின் அன்பும், அருளும், பாதுகாப்பும், வழிநடத்துதலும் இவ்விழாவைக் கொண்டாடும் உங்கள் அனைவரோடும் என்றும் இருக்க இறை ஆசீர் வேண்டுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மக்கள் தவறாக வழிநடத்தப்படுவதை நான் ஒருபோதும் விரும்பியது கிடையாது

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வெளி மாவட்டங்களில் நியமனம் பெற்று ஐந்து வருடங்கள் கடந்தபோதும் இடமாற்றம் வழங்கப்படாது பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமக்கான இடமாற்றம் தொடர்பில் நியாயம் பெற்றுத் தருமாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.



யாழ்ப்பாணத்திலுள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

குறித்த பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தபின் கருத்துத் தெரிவித்த அமைச்சர், தமிழ் மக்களின் இத்தனை அழிவுகளுக்கும் பின்னடைவுகளுக்கும் இதர தமிழ் அரசியல் தலைமைகளைப்போல சில தமிழ் ஊடகங்களும் காரணமாக இருந்துள்ளன.

ஆயுத வழியில் தீர்வு சாத்தியமில்லை என 1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்துடன் தமிழ்த் தரப்பினர் முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

ஆனால் யுத்தம் நடந்தால் அழிவுகள் வரும் என தெரிந்தும் அதைத் தொடர்வதற்கு வழிவகை செய்தது மக்களின் தவறு என்றே நான் கருதுகின்றேன்.

இந்தத் தவறை தமிழ் மக்கள் இன்றும் போலி தமிழ் அரசியல்வாதிகளின் போலிப் பிரசாரங்களின் பின்னால் சென்று தவறான முடிவுகளையும் தவறான தெரிவுகளையும் செய்வதனூடாக மேற்கொள்கின்றனர்.

தமிழ் மக்களை தவறாக வழிநடத்துவதை நான் ஒருபோதும் விரும்பியது கிடையாது. அதை முன்னெடுப்பவர்களையும் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதும் கிடையாது. நாம் எமது மக்களை பாதுகாத்து அவர்களுக்கு சிறந்த வாழ்வியலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்றே எண்ணி வருகின்றோம்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலில் நான் மக்களிடம் என்னை நம்புங்கள் நான்.செய்வேன் செய்விப்பேன் என்றே கூறி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு கோரியிருந்தேன். ஆனால் நீங்கள் ஆற்றிலே போட்டுவிட்டு இன்று குளத்தில் தேடுகின்றீர்கள்.

அந்த வகையில் நீங்கள் எதிர்பார்ப்பதை உடனடியாக என்னால் செய்து கொடுக்க முடியாது விட்டாலும் அது தொடர்பில் துறைசார் தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வுகளை பெற்றுத்தர முயற்சிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



வடமராட்சி 1991 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் MCF அறக்கட்டளை நிதியம் அண்மையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பருத்தித்துறை சூரிய மஹால் திருமண மண்டபத்தில் வைத்து வழங்கியது. இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (படங்கள்:- மணிக்குமார்)

## உயர் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன காலமானார்



(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன ஜெயவர்தன கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலமானதாக அவரது குடும்ப உறவினர்கள் தெரிவித்தனர்.

2016 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதியரசராக நியமனம் பெற்ற அவர் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற அவர் 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

மத்திய வங்கியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராகவும் காலஞ்சென்ற உயர் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன ஜெயவர்த்தன கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசிய சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்படும்

## அரசு தீர்மானம்; சிங்கள ஊடகம் தகவல்



(கொழும்பு)

தேசிய சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்படும் என அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் 72ஆம் தேசிய சுதந்திர தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் அரச நிர்வாக மற்றும் மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தலைமையில் விசேட கூட்டமொன்று இடம்பெற்றது.

இதன்போதே சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டதாக அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டது.

சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஒத்திகைகளின்போது பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய ஒட்டுமொத்த நாட்டையும் உள்ளடக்கும் வகையில் தேசிய மரநடுகை திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அன்பு, கருணை, மனித நேயத்தால் எமது மனங்களை நிரப்பிக்கொள்வோம்

## ஜனாதிபதி நத்தார் வாழ்த்துச் செய்தி



(கொழும்பு)

சமாதானம், சகவாழ்வு ஆகியவற்றின் மகிமையை இவ்வுலகிற்கு எடுத்துரைத்த இயேசு பிரானின் உன்னத போதனைகளால் மக்கள் பக்குவமடைந்துள்ள தருணத்தில் பிறக்கும் இந்த நத்தார், சிறியோர் முதல் பெரியோர் வரை உலக மக்கள் அனைவருக்கும் ஒப்பற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இவ்வுலக வாழ்க்கையில் ஒளியேற்றுவதே நத்தாரின் உண்மையான அர்த்தமாகும். இதற்காக எம்மை பற்றியுள்ள சகல தீய எண்ணங்களையும் களைந்து, அன்பு, கருணை, மனித நேயம் ஆகியவற்றால் எமது மனங்களை நிரப்பிக்கொள்வோம்.

பாவத்திலிருந்து மீண்ட இயேசு பிரான் சகல மக்களுக்கும் காட்டிய ஆன்மீக வழியை நாமும் பின்பற்றுவோம். அதுவே நித்திய வாழ்விற்கான வழியாகும் என்றே கிறிஸ்தவம் போதிக்கின்றது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நத்தார் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், "நல்ல உள்ளங்கள் அமைதியடையட்டும்" என்பதையே இக்காலத்தில் இசைக்கப்படும் இறை கானங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

அத்தகைய தூய உள்ளங்களைக் கொண்ட ஒரு சமூகமே எமது எதிர்பார்ப்பாகும். ஆண்டவரின் ஆசீர்வாதமும் விருப்பமும் அதுவேயாகும் என்பதில் நாம் நம்பிக்கை கொள்வோம். இறை ஆசீர்வாதம் பெற்ற வணக்கஸ்தலங்களில் அண்மையில் முகங்கொடுக்க நேர்ந்த துன்பியல் சம்பவங்கள் மீண்டுமொருமுறை இடம்பெறாதிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

பிறந்துள்ள இந்த நத்தாரை அச்சமும் சந்தேகமுமின்றி நிம்மதியாக கொண்டாடுவதற்கான சூழல் தற்போது நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவே கருணை உள்ளம் கொண்ட அனைவரதும் பிரார்த்தனையாக அமைந்த அதேவேளை, மிகுந்த துயரத்திற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளான மக்களுக்கு நிம்மதியையும் பெற்றுத்தரும்.

இயேசு பிரான் தனது போதனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு சகல மக்களையும் சமமாக மதித்து போற்றும் உயரிய சமூகமொன்றை உருவாக்குவதற்காக இந்த உன்னத நத்தார் தினத்தில் நாம் அனைவரும் மீண்டும் திடசங்கற்பம் பூணுவோம்.

மன்னிப்பு, மனிதநேயம், அன்பு போன்ற மகத்தான பண்புகள் பற்றிய இயேசு பிரானின் போதனைகள் நாற்திசைகளிலும் எதிரொலிக்கட்டும். இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களுக்கும் உலகெங்கும் பரந்துவாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் சுபீட்சமான நத்தார் உதயமாகட்டும் இனிய நத்தார் வாழ்த்துகள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1926

### அபிஷன்

வளர்ந்து படிச்சு பெரிய ஆளாகி நல்ல பேரு வாங்குறதுக்கு... பொறக்கும் போதே நல்ல பேரா வச்சா என்னவாம்..!



### சுஜிவன்

ஆயிரம் சொந்தம் நம்மை தேடி வரும்... ஆனால் தேடினாலும் கிடைக்காத ஒரே சொந்தம் நல்ல நண்பர்கள்..!



### அனு



கஷ்டம் வரும்போது சிரிக்கனும். அப்பதான் கஷ்டம் தெரியாதுன்னு சொன்னாங்க. நானும் சிரிச்சன். கடைசியில என்னை பைத்தியம்னு சொல்லிட்டாங்க கடவுளே!

### கவி



நான் வெளிநாட்டுக்கு போனா நீ என்னம்மா பண்ணுவேன்னு பொண்டாட்டி கிட்ட கேட்டா.. ஒரு டம்ளர் அரிசி கம்மியா போடுவேன்னு சொல்லி அனுப்புறா...

### றூபன்

வாழை இலையில ஊத்தின ரசம் மாதிரியே இருக்கு வாழ்க்கை!! எந்தப் பக்கம் போகுதுன்னே தெரியல...



### ஜெனோவா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இந்த வருட நத்தார் தினத்தில் மனம் மகிழ முடியவில்லை

## மன்.மறை மாவட்ட ஆயர் தெரிவிப்பு

(மன்னார்)

எமக்கு கிறிஸ்து பிறப்பு விழா ஒரு மகிழ்ச்சிகரமான விழா வாக இருக்கின்றது.

அகில உலகிலும் அனை வரும் கொண்டாடும் ஒரு சிறப் பான நாளாக இன்றைய நாள் இருக்கின்றது.

ஆனால் இம்முறை நத் தாரை நோக்கும் போது மன நிறைவாக மகிழ்ச்சி அடை கின்றோம் என்று கூற இயலாத நிலையில் இருக்கின்றோம் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னா ண்டோ ஆண்டகை தெரிவித் தார்.

நத்தார் வாழ்த்துச் செய்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவி த்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

நாங்கள் இந்த வருடத்தை எடுத்துக் கொண்டால் 2019 ஆம் ஆண்டிலே ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப் புக்களினால் பலர் உயிரிழந்தார் கள்.

பலர் காயமடைந்தார்கள். இது எமக்கு பெரிய சோகத்தை தந்துள்ளது.

அந்த சோகம் கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரம் இல்லை. அந்தந்த குடும்பங்களுக்கு மாத் திரம் அல்ல. முழு உலகத் தையுமே தாக்கி இருக்கின் றது.

எனவே தான் நாங்கள் இவ் வருட நத்தாரை நோக்கும் போது மன நிறைவாக மகிழ்ச்சி அடை கின்றோம் என்று கூற இயலாத நிலையில் இருக்கின்றோம்.

ஆயினும் இயேசு நாதர் எமக்கு நம்பிக்கையைக் கொண்டு வந்திருக்கின்றார். ஒரு எதிர் நோக்கை தந்திருக்கி ன்றார்.

அந்த வகையில் எமது மக்க ளுக்கு நல்லதொரு எதிர்காலம் அமைய வேண்டும். நாங்கள் ஒருவரை ஒருவர் மன்னிக்க வேண்டும்.

மற்றவர்கள் நன்றாக வாழ் வதற்கு நாங்கள் உதவ வேண் டும் என்று கருதி நாம் வாழ வேண்டும்.

எத்தனையோ பேர் உண வின்றி, உடை இன்றி தவிக் கின்றார்கள். எத்தனையோ பேர் தங்களது நாளாந்த வாழ்க் கையைக் கூட கொண்டு செல்ல முடியாத நிலையில் இருக்கின் றார்கள்.

இந்தக் கால கட்டத்திலே அடை மழை பெய்து நீர் அதிக ரித்ததால் வெள்ளத்தில் அகப் பட்டு எத்தனையோ மக்கள் பாடு படுகின்றனர்.

அவர்கள் இன்று அகதி களாக வெவ்வேறு இடங்களில் தங்கி இருக்கின்றார்கள்.

இப்படியான ஒரு நிலையிலே நாங்கள் எமது தலைவராம் ஆண்டவர் இயேசு நாதரிடம் இந்த கிறிஸ்து பிறப்பு விழாவின் போது முழு விசேடமாக மன்றாடி கேட்கக் கூடியது தான் எங்கள் மத்தியில் அமைதியையும், எங்களுக்கு ஒவ்வொரு நாளும் எல்லோரும் சிறந்த வாழ்க்கை வாழக்கூடிய ஒரு எதிர்காலத்தை பெற்றுத்தரக் கேட்பது.

அத்தோடு நாங்கள் அனை வரும் பாதுகாப்புடன் மற்ற வர்களை அரவணைக்கும் வித த்தில் வாழ பிறந்திருக்கும் கிறி ஸ்து எங்களை பலப்படுத்த வேண்டும் என மேலும் தெரி வித்தார். (9-285)

# கொழும்பு-புறக்கோட்டையில் சட்டவிரோத கடைகளை அகற்ற உடன் நடவடிக்கை




(கொழும்பு)

கொழும்பு, புறக்கோட்டை - பஸ்தியன் மாவத்தையில் அமை க்கப்பட்டுள்ள கடைகளை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறு, மின்சக்தி எரிசக்தி மற்றும் போக்குவரத்து அமைச்சர் மகி ந்த அமரவீர, தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுவுக்கு உத் தரவு பிறப்பித்தார்.

புறக்கோட்டை, பஸ்தியன் மாவத்தையிலுள்ள தனியார் பேருந்து நிலையத்தைச் சூழ வுள்ள பகுதிகளில் சட்டவிரோத மாக கடைகள் அமைக்கப்பட்டு ள்ளன.

அரசியல்வாதிகளின் அனு சரணையுடன் அமைக்கப்பட் டுள்ள இக்கடைகளால் பயணி களுக்குப் பெரும் அசௌகரி யங்கள் ஏற்படுவதாகவும் இந்தக் கடைகளில் சட்டவிரோத நட வடிக்கைகள் இடம்பெறுவதாக வும் பயணிகள் போக்குவரத்து அமைச்சுக்கு முறைப்பாடு செய்ய ப்பட்டது.

இதனையடுத்தே, இக்கடை கள் தொடர்பாக விசாரணை களை நடத்தி, அக்கடைகளை அங்கிருந்து அகற்ற உடனடி நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறும் அமைச்சர் மகிந்த அமரவீர, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு உத்தரவிட் டார். (இ-7)




**நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகத்தினரால் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு கடந்த 22 ஆம் திகதி யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் நிகழ்வும் பரிசுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.**

# வவுனியா பிரதேச அறநெறி விழா







(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச் அறநெறி விழா சாம்பல் தோட்டம் ஸ்ரீ சாய்சரவண கலாசார மண்டபத் தில் நேற்றுக் காலை இடம் பெற்றது.

வவுனியா பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உத்தி யோகத்தர் குகனேஸ்வரசர்மா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ் ணன் கலந்து கொண்டார்.

இதன்போது போட்டி நிக ழ்வுகளில் வெற்றியீட்டிய அறநெறி மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக் கப்பட்டதுடன், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

நிகழ்வில் வவுனியா பிரதேச அறநெறி ஒன்றியத்தினர், அற நெறி ஆசிரியர்கள், மாணவர் கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 240 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 260 | 200 | 300 |
| தக்காளி | 250 | 200 | 200 | 170 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 120 | 110 | 140 | 120 | 120 |
| கரட் | 250 | 370 | 300 | 200 | 400 |
| பூசணி | 50 | 70 | 50 | 70 | 80 |
| புடோல் | 180 | 180 | 140 | 100 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 400 | 420 | 600 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 140 | 160 | 140 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 310 | 300 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 100 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 220 | 180 | 240 |
| லீக்ஸ் | 350 | 400 | 340 | 340 | 400 |
| பீற்றூட் | 260 | 220 | 200 | 120 | 300 |
| கறிமிளகாய் | 180 | 300 | 240 | 220 | 280 |
| முருங்கைக்காய் | 1600 | 1500 | 800 | 600 | 800 |
| போஞ்சி | 200 | 240 | 240 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | 200 | 200 | 240 |
| கீரை -1பிடி | 60 | 80 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 55 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 400 | 150 | — | — | — |
| முள்ளங்கி | 120 | 160 | 120 | 110 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 | 50 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | 80 | 100 | 80 |




# இறப்புக்குப் பின்



"இவ்வளவு வருஷம் வேலை செய்து என்ன பிரயோசனம்? பிள்ளைகளுக்கு ஒண்ணும் சொத்துச் சேர்த்து வைக்க முடியலியே!" என்றான் ராகவன் தன் மனைவியிடம்.

அவன் மனைவி சரளா எதுவும் சொல்லவில்லை. "இத்தனை வருடமா நான் சொல்லிக்கிட்டிருந்ததை நீங்க இன்னிக்கு சொல்றீங்களாக்கும்!" என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அந்த சமயத்தில் அப்படிச் சொல்லி அவள் கணவனை அவள் புண்படுத்த விரும்பவில்லை.

ராகவன் வேலையிலிருந்து ஓய்வு பெற்று இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

ஓய்வு பெற்ற பின் கடந்த இரண்டு வருடங்களாக அவன் வயதை ஒத்தவர்களைப் பார்த்த பிறகுதான், 30 வருடங்கள் வேலை செய்த பிறகும் தான் பெரிதாக ஒன்றும் சேமித்து வைக்கவில்லை என்று அவனுக்குத் தெரிந்தது.

30 ஆண்டுகளில் ஐந்தாறு நிறுவனங்களில் பணியாற்றிப் பல ஊர்களில் வாழ்ந்து ஓய்வு பெற்ற பிறகு அவனுக்கு மிஞ்சியது ஒரு சிறிய வீடும், சேமலாப நிதி என்று வந்த பணமும் தான். அந்தப் பணத்திலும் பெரும்பகுதி பெண்ணின் கல்யாணத்துக்குச் செலவழிந்து விட்டது.

மீதமிருந்த பணத்திலிருந்து வந்த வட்டி ஒன்றுதான் அவர்கள் வருமானம். அந்தப் பணம் அவர்களுக்குப் போதுமானதுதான். அதுவும் அவர்கள் மகன், மருமகள், பேரன் என்று ஒரே குடும்பமாக வாழ்ந்து வருவதால் அவர்களுக்கென்று தனிச் செலவு கூட இல்லை. ஆயினும்...

அவன் நண்பர்களில் பலர் குறைந்தது இரண்டு வீடுகளாவது வைத்திருக்கிறார்கள். அது தவிர வருடத்தில் ஒரு வாரம் விடுமுறையைக் கழிக்க தேவையான பணங்களைப் பெற சேமிப்புக் கழகங்களில் முதலீடு, பங்குச் சந்தை மற்றும் வங்கி வைப்புகள் போன்ற சொத்துக்கள் வேறு.

சிலர் தங்கள் மகன், மகள் ஆகியோர் வீடு வாங்கப் பல இலட்ச ரூபாய்கள் கொடுத்து உதவி இருக்கிறார்கள். ராகவனால் அது முடியாது.

அவன் பிள்ளை சதீஷ் கடனில் வீடு வாங்கியபோது, ஒரு இலட்ச ரூபாய் கூட அவனால் கொடுத்து உதவ முடியவில்லை. சதீஷ் அதை ஒரு குறையாக நினைத்தானோ என்னவோ ராகவனுக்குத் தெரியாது. ஒருவேளை மருமகளோ, சம்பந்தியோ நினைத்திருக்கலாம்!

எல்லோரும் பெண், பிள்ளைகளுக்கென்று எவ்வளவோ சேமித்து வைத்திருக்கும்போது, தான் மட்டும் மகனுக்கு பாரமாக அவன் வீட்டில் இருந்து கொண்டிருக்கிறோமே என்று நினைத்தான்.

இதை அவன் மனைவியிடம் சொன்னபோது, "இப்ப வருத்தப்பட்டு என்ன செய்யிறது? சம்பாதிக்கும்போதே நாலு காசு சேர்த்து வையுங்கன்னு தலை தலையா அடிச்சுக்கிட்டேன். எங்கிட்ட பணத்தைக் கொடுத்திருந்தா நானாவது கொஞ்சம் சேர்த்து வைச்சிருப்பேன்!" என்று அங்கலாய்த்துக் கொண்டாள் அவள்.

சம்பாதித்த பணமெல்லாம் எங்கே போயிற்று? அவன் ஒன்றும் ஊதாரி இல்லை. குடி, சூதாட்டம் போன்ற பழக்கங்கள் அவனுக்கு இல்லை. குடும்பத்துக்காகச் செலவழித்ததைத் தவிர, அவன் தனக்கென்று எதுவும் செய்து கொண்டதில்லை. திட்டமிட்டுச் சேமிக்காமல் வருமானத்தைச் செலவழித்ததுதான் அவன் செய்த தவறு. இன்ஷ்சூரன்ஸ் கூடப் பெரிய அளவுக்கு எடுக்கவில்லை.

"நான் இறந்த பிறகு என்னைப் பற்றி என் மகனும் மருமகளும் என்ன சொல்வார்கள்? "எனக்கு ஒரு பைசா கூடச் சேர்த்து வைக்கவில்லை என் அப்பா!" என்று குறைபட்டுக் கொள்வானா சதீஷ்? நான் இறந்த பிறகு வரும் சிறிதளவு இன்ஷ்சூரன்ஸ் பணமும் என் சேமிப்பும் மட்டுமே என் மனைவியின் மிச்சமிருக்கும் வாழ்க்கைக்குப் போதுமானதாக இருக்குமா?"

ராகவனின்கவலைகள் உண்மையாகுமா? என்று தெரியும் காலம் வந்தது. தூங்கப் போனவன் காலையில் எழுந்திருக்கவில்லை. "தூக்கத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு இறந்திருப்பார்" என்றார் டாக்டர்.

ராகவன் இறந்த விபரம் தெரிந்ததும் பலர் வந்து பார்த்தனர்.

ராகவனுக்குத் தெரிந்தவர்கள் இத்தனை பேர் இருப்பார்களா? என்று சரளாவுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"அப்பாவோட மரண அறிவித்தலை பேப்பரில கொடுக்கணுமா?" என்று சரளாவைக் கேட்டான் சதீஷ்.

"உங்கப்பா பல ஊரிலேயும் இருந்திருக்காரு. அதனால எல்லாப் பேப்பருக்கும் கொடுத்திடடா" என்றாள் சரளா.

அடுத்த சில நாட்களுக்கு அவர்கள் வீட்டுப் போன் அடித்துக் கொண்டே இருந்தது. எங்கெங்கிருந்தோ யார் யாரோ போன் செய்தார்கள்.

"ராகவன் சேர் போயிட்டாரா? ரொம்ப வருத்தமா இருக்கு. அவரை மாதிரி ஒரு மனுஷனைப் பார்க்க முடியுமா? எவ்வளவு நல்லவரு!"

"நான் ஒரு சாதாரண பியூன் தான். எனக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்து நடத்தினாரு!"

"எல்லோரிடமும் ரொம்ப அன்பா இருப்பாரு. யாரையும் ஒரு வார்த்தை கூடத் தப்பாப் பேசினது கிடையாது".

"அலுவலகத்தில அவருக்குக் குழிபறிச்சவர்களிடம் கூட அவர் விரோதம் பாராட்டியது இல்லை. இப்படி ஒரு மனுஷனைப் பாக்க முடியுமா?"

"எல்லோருக்கும் உதவி செய்வாரு. ஆனால் யாரிடமும் ஒரு உதவி கூடக் கேட்க மாட்டாரு. இப்படி ஒரு ஆத்மா!"

இதுபோன்ற அனுதாபச் செய்திகள் வந்து கொண்டே இருந்தன.

சரளாவுக்கே ஆச்சரியமாக இருந்தது. ராகவன் ஒரு நல்ல மனிதன் என்று அவளுக்குத் தெரியும்.

ஆனால் எல்லோரிடமும் இப்படி ஒரு நல்ல பெயரைச் சம்பாதித்திருப்பார் என்று அவளுக்குத் தெரியாது.

நேரிலும் பலர் வந்து அனுதாபம் தெரிவித்தனர். அவர்களும் இதேபோன்ற கருத்துக்களைக் கூறினர். அவை உபசாரத்துக்குச் சொன்ன வார்த்தைகள் இல்லை. ஆழ் மனதிலிருந்து வந்தவை என்று சரளாவுக்குப் புரிந்தது.

"உங்கப்பாவைப் பற்றி நிறையப் பேர் போனில கேட்டாங்கடா!" என்றாள் சரளா சதீஷிடம்.

"ஆமாம்மா! எனக்கும் செல்போனில நிறைய அழைப்பு வந்தது. அப்பா எவ்வளவு பெரிய மனுஷர்! இப்படிப்பட்ட அப்பா கிடைத்ததற்கு நான் ரொம்பப் புண்ணியம் பண்ணி இருக்கணும்" என்றான் சதீஷ்.

அருகிலிருந்த அவன் மனைவி அதை ஆமோதிப்பது போல் புன்னகை செய்தாள்.

குறள் 114

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

பொருள்:

**ஒருவர் உயர்ந்தவரா இல்லையா என்பது அவர் இறந்த பின் அவர் விட்டுச் சென்ற பெயரிலிருந்து அறிந்து கொள்ளப்படும்.**

## விடுகதைகளும் விடைகளும்

- தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்க முடியாது அது என்ன?
  **முதுகு**
- வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?
  **பூட்டும் திறப்பும்**
- காட்டிலே பச்சை கடையிலே கறுப்பு வீட்டிலே சிவப்பு. அது என்ன?
  **மரம்-கரி-நெருப்பு**
- என்னைத் தெரியாத போது தெரிந்து கொள்ளும் ஆவல், தெரிந்த பிறகு பகிர்ந்து கொள்ளும் ஆசை, நான் மறைக்கப்பட வேண்டியவன். நான் யார்?
  **இரகசியம்**
- கொம்பு நிறைய கம்பு அது என்ன?
  **மாதுளம்பழம்**
- நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்?
  **மணிக்கூடு**
- மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன?
  **ஈசல்**
- நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்?
  **பென்சில்**
- விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன?
  **தும்பிக்கை**

## பழமொழிகள்

- பனை மரத்தடியில் பால் குடித்தது போல.
- பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்.
- பிச்சை எடுத்ததாம் பெருமாள் அதையும் பறித்ததாம் அனுமார்.
- பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது போல்.
- புதுமைக்கு வண்ணான் கரைகட்டி வெளுப்பான்.
- புலி பசித்தாலும் புல்லுத் தின்னாது.
- பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்.
- பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார் காடாள்வார்.
- முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்.
- யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்.
- யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.
- விடிய விடிய ராமாயணம் விடிந்த பிறகு சீதைக்கு ராமன் என்ன முறை.

தன்னைப் பற்றி நினைப்பவனிற்கு நரக வாழ்வு; மற்றவனைப்பற்றி நினைப்பவனிற்கு சொர்க்க வாழ்வு – ரமணர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராணுவ மயமாக்கல் நிம்மதியற்ற சூழலை ஏற்படுத்தும்

சாதாரண பாதுகாப்பு நிலைமைகளுக்கு முப்படைகளையும் ஈடுபடுத்துவதென்பது பலத்த சந்தேகங்களையும், அச்சமான உணர்வையும் ஏற்படுத்தக் கூடியது.

இங்கு அச்சமான மனநிலை என்பது சிங்கள மக்களுக்குப் பொருந்தாது.மாறாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே அச்சமான சூழ்நிலைக்கு ஆளாகப்போகின்றனர்.

அதாவது வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த கொடும்போரும் அதற்கு பின்பான முப்படைகளின் நடவடிக்கைகளும் தமிழ் மக்களிற்கு எதிராகவே அமைந்து இருந்தன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்று கூறிக் கொண்டாலும் அது தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே நிகழ்த்தப்பட்டது.

அப்பாவித் தமிழ் மக்களை கைது செய்வது, சிறையில் அடைத்து வைப்பது, தம்பாட்டில் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது என்பது போன்ற அனுபவிப்புக்களை தமிழ் மக்கள் இன்னமும் மறக்கவில்லை.

இது தவிர, யுத்தத்தின் பின்பான படையினரின் தேடுதல் நடவடிக்கைகள், கைதுகள், பயங்கரவாத தடைப் பிரிவின் விசாரணைகள், முன்னாள் போராளிகள் மீதான அவதானிப்புக்கள் என அனைத்தும் அச்சம் தருவதாக இருந்தன.

இதன் கரணமாக இராப்பொழுது என்றாலே ஏக்கம் நிறைந்த பொழுதாகவே கழிந்து போகும்.

எனினும் கடந்த ஆட்சியில் முப்படைகள் முகாம்களில் இருப்பதான ஏற்பாடுகள் அச்சமற்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருந்தது.

ஆனால் இப்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற கையோடு முப்படையையும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்துவது என்ற தீர்மானத்தையடுத்து கடந்த இரு தினங்களாக படையினர் சுற்றிவளைப்புகளிலும் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆவாக்குழு, வாள்வெட்டுக் குழுக்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே படைத்தரப்பின் சுற்றி வளைப்புக்களும், ரோந்துப் பணிகளும் நடப்பதாகக் கூறப்பட்டாலும், இந் நடவடிக்கைகள் முன்னாள் போராளிகளினதும் வன்னி யுத்தத்திற்குள் அகப்பட்டவர்களினதும் மனநிலையில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்.

2009 ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவுற்ற பின்பு யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், யுத்தத்திற்குள் அகப்பட்டவர்கள், உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் எனப் பெரியதொரு எண்ணிக்கையானவர்கள் உள நெருக்கடிக்கு ஆளாகினர் என்ற தகவலை உள வைத்திய நிபுணர்கள் உறுதி செய்து இருந்தனர்.

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்டவர்கள் மெய்ப்பாடு என்ற உளநெருக்கடியின் தாக்கத்திற்கு ஆளாகினர் என்ற தகவல் உறுதி செய்யப்பட்டது.

இதை அடுத்து உள மருத்துவர்களும் உளவள உத்தியோகத்தர்களும் அர்ப்பணிப்பான பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்தி இருந்தனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், மீண்டும் தமிழர் தாயகத்தில் இராணுவ பிரசன்னம் இருப்பதானது நிம்மதியற்ற சூழ்நிலையை தோற்றுவிக்கப் போகின்றது.

எனவே, பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்யப் பொலிஸாரை சேவையில் ஈடுபடுத்தி அவர்களூடாக வாள் வெட்டுக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதே பொருத்தமானதாகும்.

எனவே இது பற்றி உரியவர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். இது விடயத்தில் உள மருத்துவர்களும் உண்மை நிலைமையை அறிக்கைப்படுத்துவது காலத்தின் அவசிய தேவையாகும்.

# யாழில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த விசேட கவனம் செலுத்துவேன்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆரம்பமே அன்றி முடிவுறவில்லை என கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் நான் விசேட கவனம் எடுப்பேன்.

பொது மக்களின் நிம்மதியான வாழ்க்கையைக் குழப்பும் வகையில் செயற்படுவோருக்கு எவ்வித பாரபட்சமும் இன்றிப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச செயலாளர் தமது பிரதேச செயலக பகுதிகளான அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் அதிகளவான மணல் கடத்தல் இடம்பெறுவதாகவும் அதனைத் தடுப்பதற்கு இரு பொலிஸ் காவலரண்களை குறித்த பகுதியில் அமைத்துத் தரவேண்டும் என அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தார்.

அதுமட்டுமல்லாது யாழ் மாவட்டத்தில் இடம்பெறுகின்ற வீட்டுத்திட்டங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகளுக்கு தடையின்றி மணலைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

சங்கானை, தீவகம் நுழைவாயில், யாழ் பேருந்து நிலையம் ஆகியவற்றில் பொலிஸ் காவலரண்களை அமைக்க வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளை கலந்துரையாடலில் பங்குபற்றியோர் அமைச்சரிடம் முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தான் அமைச்சராக பதவியேற்றபின் முதலாவதாக இடம்பெறும் கலந்துரையாடல்இதுவாகும் ஆகவே சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் ஆரம்பமே அல்லாமல் இது முடிவுபெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம - 3, 10,101)

# கிரகண காலத்தில் ஆலயங்களை பூட்டுவது தவறு இக் காலத்தில் பூசை செய்வதே சிறந்தது

### கம்பவாரிதி இ.ஜெயராஜ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கிரகண காலத்தில் ஆலயங்களில் பூசை செய்வதே உயர்ந்த பலனைத் தரும் என கம்பவாரிதி இ.ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, உலகம் உய்ய உதித்தது நம் சைவசமயம். இறைநிலையுற்ற ஞானியரால் நமது சமயத்தின் வழிபாட்டு முறைகள் அனைத்தும் ஏற்கனவே வரையறுத்துத் தரப்பட்டுள்ளன. நமது சைவத்தின் பிரமாண நூலாகிய வேதமும் ஆகமமும் வழிபாடு பற்றி ஒரு கருத்தை உரைத்தால் அக் கருத்திற்கு மாற்றுச் சொல்லும் உரிமை எவர்க்கும் இல்லையாம். இவ் உண்மையின் அடிப்படையில் கிரகணங்கள் பற்றிய தவறான ஒரு நடைமுறையைப் பற்றி சுட்டிக் காட்டவே இக்கட்டுரையை வரைகின்றேன்.

சூரிய,சந்திர கிரகணங்களின் போது ஆலயங்களைப் பூட்டி வைக்க வேண்டும் என்ற செய்தி பலராலும் பரவலாக இன்று சொல்லப்படுகிறது. நம் நாட்டில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் இம்மரபை சிலர் விபரம் தெரியாது கடைப்பிடிக்கின்றனர். கிரகண நேரத்தில் ஆலயங்களைப் பூட்டி வைக்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்கள் ஏதும் நமது ஆகமநூல்களில் சொல்லப்பட்டதாய்த் தெரியவில்லை.

இடைக்காலத்தில் விஞ்ஞான முறையில் கிரகண நேரத்தில் தீயகதிர்கள் பூமியில் பரவுவதாய்ச் சொல்லப்பட்டது. அதனால் அந்நேரத்தில் உணவு முதலியவற்றை உண்ணக்கூடாது என விஞ்ஞானிகள் உரைத்தனர். விஞ்ஞானம் எதைச் சொன்னாலும் அதுவே உண்மை என நம்பிய சிலரே மேற் கருத்தை நமது சமய முறையிலும் புகுத்தி ஆலயங்களைப் பூட்டச் செய்து அபச்சாரம் செய்து வருகின்றனர். இது தவிர கிரகண நேரத்தில் ஆலயங்களைப் பூட்டுவதற்கான காரணம் ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை. விஞ்ஞானிகளால் முன்பு சொல்லப்பட்ட இக் கருத்தும் இன்று அவர்களாலேயே மறுக்கப்படுகிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பாக நிகழ்ந்த ஓர் சந்திர கிரகணத்தின்போது தமிழ் நாட்டு விஞ்ஞானிகள் அமைப்பைச் சார்ந்தோர் அக் கிரகண நேரத்தில் சென்னை மெரீனா கடற்கரையில் கூடி உணவுண்டு அக்கருத்தை மறுத்த காட்சியினை தமிழ் நாட்டின் தொலைக் காட்சிகள் அனைத்தும் தமது செய்தியில் காட்டின.

ஆனால் நம்முடைய சைவ ஆகமங்கள் கிரகண காலத்தை புண்ணியகாலம் என்றே உரைக்கின்றன. பஞ்சாங்கங்களில் கிரகண காலத்தைக் கிரகண புண்ணியகாலம் என்று எழுதியிருப்பதை நாம் காண முடியும். அக்கிரகண நேரங்களில் ஆலயங்களில் கிரியைகள் நடத்தப்பட வேண்டும் என்பது ஆகமங்கள் சொல்லும் செய்தி. இதனை அறியாது ஒருசிலர் உண்மைக்கு நேர்மாறாக ஆலயங்களைப் பூட்டி அபச்சாரம் செய்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

### அரச அதிபருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ. ஜெயக்குமார் மணல் கொள்ளையில் ஈடுபடும் வாகன இலக்கங்கள் வெளியீடு தொடர்பாக யாழ் மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். மேற்படி கடிதத்தின் பிரதி வலம்புரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடிதத்தில் உள்ள விபரங்கள் அப்படியே தரப்படுகின்றது.

மேற்படி விடயம் தொடர்பில் தங்களால் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள மணல் கொள்ளையில் ஈடுபடும் வாகன இலக்கங்களின் வெளியீடு தொடர்பில் எமது சங்க பாரவூர்தியினது வாகன இலக்கமும் (LE – 5257) வெளியிடப்பட்டுள்ளது. எமது சங்கம் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை என்றும் மணல் அனுமதிப்பத்திரம் இல்லாமையினால் எமது பாரவூர்தியானது எவ்வித மணல் சேவையிலும் ஈடுபடவில்லை என்பதனையும் தற்போது எமது பாரவூர்தி சங்க வளாகத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் தங்களுக்கு தயவுடன் அறியத் தருகின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு

டெங்கு அபாயம்- தற்பொழுது டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. எனவே நுளம்புக் கடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பிறரை உயர்வாகக் கருதுபவன் தானும் உயர்கிறான். தாழ்வாகக் கருதுபவன் தானும் தாழ்கிறான். நமது நினைப்பே நமது வாழ்வில் பிரதிபலிக்கிறது.
-கி.ஆ.பெ.விசுவநாதம்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### ஆறுதல் தரும் ஆறுமுகன்

❖ கடவுள் எல்லா இனங்களையும் படைத்து இருக்கிறார். ஆனால், மனிதனுக்கு மட்டுமே மனம் என்னும் கருவியைக் கொடுத்திருக்கிறார். மனதால் நன்றி உணர்வோடு கடவுள்மீது பக்தி செலுத்த வேண்டியது கடமை.

❖ தினமும் மாலையில் குடும்பத்துடன் அமர்ந்து கூட்டு வழிபாடு செய்ய வேண்டும். இதனால், குடும்பத்தில் ஒற்றுமை, தெய்வகடாட்சம் நிறைந்திருக்கும். குடும்பத்தலைவர் பாடல்களைச் சொல்ல மற்றவர்கள் வழிமொழிய வேண்டும்.

❖ பசுவின் மடியில் இருந்து பால் சுரப்பது போல, கோயிலில் பக்தி உணர்வு சுரக்கிறது. அதனால் ஆலயவழிபாட்டை வாரம் ஒருமுறையாவது, செய்ய வேண்டியது அவசியம்.

❖ பன்னிருகைகளால் வாரி வழங்கும் வள்ளலாக முருகப்பெருமான் வீற்றிருக்கிறார். வாழ்வு வளம் பெற ஆறுமுகனின் திருவடிகளைப் பணியுங்கள்.

❖ உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து ஆறுதல் இன்றி அலைகின்றன. அறுபடை வீடுகளைத் தரிசித்தால் வாழ்வில் நிம்மதி நிலைத்திருக்கும்.

# மாகாண தேசிய பன்னாட்டு விளையாட்டரங்கில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு







வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான மாகாண தேசிய பன்னாட்டு விளையாட்டுகளில் சாதனை படைத்த மாகாண வீர, வீராங்கனைகளுக்கு விருது வழங்கி மதிப்பளிக்கும் வர்ண இரவுகள் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் இ.குருபரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதன்மை செயலாளர் அ.பத்திநாதன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான பூப்பந்தாட்டம்; சம்பியனாகி அசத்தினார் காண்டீபன்





நடத்திய பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் அண்மையில் திருகோணமலை மக்செல் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

இதில் 40 வயது ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் காண்டீபன் திருமலை மாவட்டத்தை சேர்ந்த டிஸ்னியைச் எதிர்த்து பலப் பரீட்சை நடத்தினார்.

மூன்று செற்களைக் கொண்ட இப்போட்டியில் 21:19 22:20 புள்ளிகளைப் பெற்று 2:0 நேர் செற்றில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றினர் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய காண்டீபன் அணியினர்.

இதேவேளை 40 வயதுக்கு மேற்பட்டடஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் கிண்ணம் வென்று அசத்தியது.

யாழ்.மாவட்டத்தை சேர்ந்த காண்டீபன்-குகதாஸ் இணை இவ்விறுதியாட்டத்தில் திருகோணமலையைச் சேர்ந்த விஸ்ணுகாந்த் - ஸ்ரீமுருகன் இணையை எதிர்கொண்ட காண்டீபன் இணை 19:21 21:15 21:12 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது. (க-60)

கிழக்கு மாகாண பூப்பந்தாட்டச் சங்கம் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கிடையில் நடைபெற்ற பூப்பந்தாட்டத் தொடரில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆண்களுக்கான ஆட்டத்தில் தனிநபர் மற்றும் இரட்டையர் ஆட்டங்களில் கிண்ணம் வென்றார் யாழ்.மவட்டத்தைச் சேர்ந்த காண்டீபன்.

கிழக்கு மாகாண பூப்பந்தாட்டச்சங்கம்

## வெற்றிவாகை சூடியது கலைப்பீடம்



அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்களிடையே இடம்பெற்ற பீடங்களுக்கிடையிலான தடகளப் போட்டியில் கலைப்பீடம் வெற்றிவாகை சூடிக் கொண்டது. 11 பீடங்கள் பங்குபற்றிய இப்போட்டியில் கலைப்பீடம் அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-10)

## FA கிண்ண உதைபந்தாட்டம் அடுத்த சுற்றில் குருநகர் பாடும்மீன்



குருநகர் பாடும்மீன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. FA கிண்ண 32 ஆவது போட்டி கொழும்பு பெத்தேகான விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாண குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து புத்தளம் லிவர்பூல் அணி மோதியது. இப் போட்டி 1-1 என சமநிலையில் நிறைவடையவே சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. சமநிலை தவிப்பு உதயில் 4-3 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றதுடன் அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. பாடும்மீன் அணி சார்பாக பாடும்மீன் அணியின் நட்சத்திர வீரர் கெயின்ஸ் சிறப்பாகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-106)

## ஐ.நா சவால்...

மனித உரிமைகள் பேரவையில் சவால்களை எதிர்கொள்ள வெளியுறவுத்துறை அமைச்சு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அந்தவகையில் இவற்றினை எதிர் கொள்ள அமைச்சர் தினேஷ் குணவர்தன, வெளியுறவுத்துறை அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகள் கூட்டாகச் செயற் படும்.

மேலும் பல்வேறு நாடுகளில் வசிக்கும் இலங்கை வெளிநாட்டினர் மனித உரிமை கள் பேரவை அமர்வில் நாட்டிற்கு ஆதரவாக உண்மைகளை முன்வைத்தனர். நாங்கள் அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவளிப்போம்.

மனித உரிமைகள் பேரவையில் நாட்டின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் பாதுகாக்க நாங்கள் செயற்படுவோம்" என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார். (ம-3)

## காய்ச்சல் காரண..

மேற்கைச் சேர்ந்த சதீஸ் பரகேசவன் என்ற 1 1/2 வயது சிசுவே உயிரிழந்துள்ளது.

கடந்த 21ஆம் திகதி சிசுவுக்கு காய்ச்சல் ஏற்பட்டு மறுநாள் தனியார் வைத்தியசாலை யில் மருந்து எடுத்த நிலையில் நேற்று முன் தினம் திடீரென சிசு மயக்கமடைந்த நிலை யில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது சிசு உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## 12 கிலோ கேரள...

இராமேஸ்வரம் பாம்பன் மற்றும் தங் கச்சி மடம் ஆகிய பகுதிகளில் சுற்றியுள்ள தீவுகளில் இருந்து சட்டவிரோதமாக இலங் கைக்கு தொடர்ச்சியாக கடலட்டை, தங்கம், கஞ்சா, போதை மாத்திரைகள், பீடி சுற்றும் இலைகள் போன்றவை கடத்தப்பட்டு வரு கின்றன.

இராமநாதபுரம் கடல் வழியாக கடத்தல் சம்பவத்தை தடுக்க மாவட்ட பொலிஸ் கண் காணிப்பாளர் தலைமையில் தனிப்படை அமைத்து 24 மணி நேரம் ரோந்து பணி தீவிரபடுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங் கட்கிழமை மாலை மாவட்ட பொலிஸ் கண் காணிப்பாளருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸ் துணை ஆய்வாளர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பாம்பன் தெற்கு கடற்கரையில் இருந்து தனி படகு மூலம் பாம் பன் அருகே உள்ள தீவுகளில் சோதனை நடத்தினர்.

இதன் போது சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த ஒரு படகை (நாட்டுப்படகு) நோக்கி சென்றபோது அவர்கள் தங்கள் கையில் இருந்த ஒரு மூட்டையை கடலில் வீசி விட்டு சென்றுள்ளனர்.

அந்த மூட்டையை எடுத்து சோதனை செய்தபோது அந்த மூட்டையில் ஆறு பக் கெட்களில் சுமார் 12 கிலோ கஞ்சா மற்றும் ஜி.பி.எஸ் (திசைகாட்டும் கருவி) இருந்தது தெரிய வந்தது.

மேலும், தப்பிச் சென்றவர்களை பிடிப் பதற்காக அவர்களை விரட்டி சென்ற போது கடத்தல்காரர்கள் மூன்று பேர் படகில் இருந்து கடலில் குதித்து மாயமாகினர்.

இதனையடுத்து நாட்டுப் படகையும் கஞ்சாவையும் பாம்பன் தெற்கு வாடி கடற் கரைக்கு எடுத்து வந்த பாம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை பார்வையிட்ட மாவட்ட பொலிஸ் கண்காணிப் பாளர் செய்தியாளர்களிடம் பேசுகையில், மாவட்ட பொலிஸ் துறையின் சிறப்பு எண் ணுக்கு பொதுமக்கள் அளித்த தகவல் அடிப் படையில் சட்டவிரோதமாக கஞ்சா கடத்த இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து நடுக்கடலுக்குச் சென்ற பொலிஸ் ஆய்வாளர்கள் திறமையுடன் செயற்பட்டு அந்த கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

கடத்தலில் ஈடுபட்டவர்களை பிடிப்பதற்கு கடுமையான முயற்சி செய்தும் கடத்தல் காரர்கள் மற்றும் முக்கிய குற்றவாளிகள் தப்பியதால் அவர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பரி மாற்றத்திற்காக இலங்கையில் இருந்து யாரேனும் வருகிறார்களா அல்லது இந்தப் பகுதிகளில் வேறு இடங்களில் கடத்தல்காரர் கள் மறைந்து உள்ளனரா என்பது குறித்து பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கடத்தல் சம்பவங்களை தடுக்க முழு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்ட பொலிஸ் துறை அளித்துள்ள தொலைபேசி எண்ணால் பல சட்டவிரோத சம்பவங்கள் தடுக்கப்பட்டு வருகிறது என்றார். (ம-3)

## நேற்று இரவு...

காரணமாக கைதி ஒருவரும் பொலிஸ் அதிகாரியும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச் சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (ம-3)

## சட்டவிரோத...

ரடிப்படை உதவியுடன் சட்டவிரோதமான செயல்கள் நிறுத்தப்படும் என மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மகேஷ் சேனாரட்ன தெரிவித்தார்.

நேற்றைய தினம் கடற்றொழில் மற்றும் நீரியல் மூலவளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வடக்கில் இடம் பெற்று வரும் மண் கொள்ளை, வாள்வெட்டு வன்முறைச்சம்பவங்கள், அத்தோடு போதைப் பொருள் கடத்தல் போன்றவற்றை தடுத்தல் தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டத்தின்போது கருத்து தெரிவித்த யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்.

இன்றிலிருந்து பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் இடம் பெற்று வரும் வன்முறை சம்பவங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் எனினும் பொதுமக்கள் தமக்குரிய தகவல் களை தந்து உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

அத்தோடு நேற்றைய சந்திப்பின் போது பிரதேச சபை உறுப்பினர்கள் பலராலும் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டன.

யாழ்.மாநகர சபை உறுப்பினர் ரெமிடி யஸ் கருத்து தெரிவிக்கையில்,


அரியாலை பகுதியில் மணல் கடத்தலை தடுக்க நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதி காரிகள் அனைவரையும் இடமாற்றம் செய் யும் பட்சத்தில் மணல் கடத்தல்காரர்களை இலகுவாக கைது செய்ய முடியும் என குற் றம் சாட்டினார்.

அத்தோடு தான் இவ்வளவு காலத்தில் பலதரப்பட்ட முறைப்பாடுகளை பொலி ஸாருக்கு தொலைபேசி மூலமும் தனிப்பட்ட ரீதியில் தெரிவித்திருந்தும் இன்றுவரை போதைப்பொருள் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப் படவில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

இதன்போது அங்கு கருத்துரைத்த மாநகர சபை உறுப்பினர் செல்வவடிவேல், பொலிஸாருக்கு நாம் தகவலை வழங்கும் போது அந்தத் தகவல் சிறிது நேரத்திலேயே சம்பந்தப்பட்டவருக்கு செல்கின்றது.

எனவே பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல்களை வழங்க பயப்படுகிறார்கள். இவை அனைத்தையும் நாங்கள் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். (ம-3,10,101)

## உரும்பிராய் தேவாலயத்தில்
# 85 அடி உயரமான கிறிஸ்துமஸ் மரம் திறப்பு



யாழ்ப்பாணம், உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலயத்தில் அமைக்கப்பட்டுள் 85 அடி உயரமான கிறிஸ்துமஸ் மரம் நேற்று இரவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வண்ணமயமான மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் மரத்தை புனித மிக்கேல் தேவாலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி ம.பத்திநாதர் உத்தி யோகபூர்வமாக திறந்து வைத்துள்ளார்.

குறித்த மரத்தை அமைப்பதற்கு இரும்பு குழாய்கள், வைக்கோல் மற்றும் 1100 தண்ணீர் பிலாஸ்டிக் போத்தல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது.

இப்படியான ஒரு பிரமாண்டமான கிறிஸ்து மஸ் மரம் 15 பேர் கொண்ட குழுவால் 10 நாட்களில் அமைக் கப்பட்டுள்ளதுடன். கடந்த நான்கு வருடங் களாக அமைக்கப்பட்டு வரும் கிறிஸ்துமஸ் மரத்தில் இந்த வருடம் அமைக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரமே உயர மானது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ராஜித சேனார...

விசாரணைத் திணைக்களம், ராஜித சேனா ரத்னவின் செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல்கள் குறித்த தகவல்களை வெளி யிட்ட இருவரையும் கைது செய்துள்ளது.

அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இரு வரும் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப் படையில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவையும் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்றன.

அந்த விசாரணைகளின் அடிப்படையி லேயே நீதிமன்றில் பிடியாணை பெற்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனா ரத்னவை கைது செய்யுமாறு சட்ட மா அதி பர், குற்ற விசாரணைப் பிரிவுக்கு நேற்று மாலை அறிவுறுத்தல் வழங்கினார்.

அதனடிப்படையில் பாராளுமன்ற உறுப் பினரைக் கைது செய்வதற்கான பிடி யாணையை கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் குற்ற விசாரணைப் பிரிவினர் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, தம்மைக் கைது செய்வ தற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தர விடுமாறு கோரி, கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ராஜித சேனாரத்ன முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணையை வரும் 30ஆம் திகதிவரை நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

இந்த நிலையில் முன்னாள் அமைச்ச ரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன வெளிநாடு செல்வதற்கு தடை உத்தரவை குற்ற விசாரணைப் பிரிவு நேற்று நீதிமன்றில் பெற்றிருந்தது. (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2019/12/24
சீட்டிழுப்பு இலக்கம் 4077
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 4 6 1 6 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 24-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2340
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 05 13 36 65
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/12/24
சீட்டிழுப்பு இலக்கம் 0640
லக்கினம் இடபம்
வெற்றி இலக்கங்கள் 07 30 45 52
தேசிய லொத்தர் சபை

செவண
திகதி 2019/12/24
சீட்டிழுப்பு இலக்கம் 247
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 05 14 34 67
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24/12/2019 வெற்றி வாரம் 2717 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் தனுசு 05 12 19 23
கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000
2019/12/25 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

E 07 09 29 38
சீட்டிழுப்பு வாரம்: 537
வர்ணம் இளம்சிவப்பு
திகதி: 24.12.2019 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,713,695
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 831
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 77,001,980/-
வெற்றி இலக்கங்கள் 06 16 20 72
ஆங்கில எழுத்து D
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1632 சீட்டிழுப்பு திகதி 24/12/2019
வெற்றி இலக்கங்கள் 17 24 35 43
ஆங்கில எழுத்து L
ரூ. 43,192,888
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## பாதுகாப்பு உத்தி...

தேச சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு நேர கடமைக்குச் சென்றவர் மறுநாள் காலை கையொப்பமிட்டு வெளியேறியுள்ளார்.

வெளியேறியவர் வலி.மேற்கு பிரதேச சபையில் இருந்து 2.5 Km தூரத்திலுள்ள மூளாய் பிள்ளையார் கோவிலின் அருகாமையிலுள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,104)

## சட்டவிரோத...

லின் பின்னணியில் பொலிஸார் இருக்கிறார்கள் என்ற சந்தேகம் வலுப்பெறுகிறது.

ஏனெனில் யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இடம்பெறும் குறித்த மணல் திருட்டுத் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதும் அவர்கள் ஒரு பக்கத்தால் வெளியேற மறுபக்கத்தால் பொலிஸார் வருகின்றனர்.

அது மட்டுமல்லாது சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தலைக்கவசம் அணியாது சென்று பொலிஸாரிடம் பிடிபடும் நபர்களுள் சிலர் சட்டவிரோத மணல் கடத்தல்காரர்களின் உதவியைப் பெற்று பொலிஸாரிடம் அணுகுகிறார்கள்.

கையடக்கத் தொலைபேசியில் உள்ள சிம் இல் உள்ள இலக்கங்கள் யாருடையது என அடையாளம் கண்டு போதைப்பொருள் வைத்திருப்போரை கைது செய்யும் பொலிஸார் கனரக வாகனங்களில் திருட்டு மணல் செல்வதைப் பிடிக்க முடியாதா? மேலும் யாழ் சிறைச்சாலையில் போதைப்பொருள் பாவனை இடம்பெறுவதோடு போதைப்பொருள் பாவனையால் அடிமையாக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் மணல் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு நாடு தழுவிய பொதுவான சட்டவரையறையொன்று ஏற்படுத்தப்படுவதோடு கிராம மட்டங்கள் தோறும் விழிப்புக் குழுக்களைச் செயற்படுத்த வேண்டும் என அவர்கள்மேலும் கேட்டுக் கொண்டனர். (ம-3,10,101)

## குடும்பஸ்தர்...

தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இதில் பளைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் நடராஜா பிறேமவாசன் (வயது - 45) என்பவரே மரணமடைந்தவராவார்

பருத்தித்துறை வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த பிறேமவாசன் ஏ9 வீதி இராமாவில் கோவில் பகுதியில் கடந்த 20/12/2019 காலை 7.45 மணிக்கு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,114)

## இளைஞன் ஒரு...

மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளரும் கிளிநொச்சி முருகானந்த கல்லூரியின் பழைய மாணவனுமான் ரவிச்சந்திரன் ரிதுசன் என்ற 24 வயதான இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## தீக்காயங்களுக்...

கடந்த மாதம் 5ஆம் திகதி குறித்த பெண் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவருக்கு திருமணமாகி நான்கு மாதங்களே ஆகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,18)

## அரசு வழங்கும்...

தடை விதிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகளுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

இதன்போதே இந்த அறிவுறுத்தலை அமைச்சர் வழங்கினார்.

"நீண்ட தூரத்துக்குப் பயணிக்கும் பேருந்துகளில் அதிக இரைச்சலுடன் பாடல்களை ஒலிபரப்புவதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

சுமார் 15 ஆயிரம் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பயணிகளிடமிருந்து தேசிய ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவர்கள் நூறு சதவீத பேரும் பேருந்துகளில் அதிக சத்தத்துடன் ஒலிபரப்பப்படும் பாடல்களால் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்" என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்த நிலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆயிரக்கணக்கான பாடல்கள் அடங்கிய தொகுப்பை அறிமுகப்படுத்தவுள்ளது.

அந்தத் தொகுப்பு அரச மற்றும் தனியார் பேருந்துகளுக்கு வழங்கப்படும். சகல பேருந்துகளிலும் 2020 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அந்தப் பாடல்கள் தொகுப்பையே ஒலிபரப்ப முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன், பேருந்தில் பயணிகளுக்கு முக்கியமான செய்திகளைக் கொண்ட காணொலிகளும் ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, அமைச்சர் மகிந்த அமரவீரவின் பங்களிப்புடன் மாகும்புராவில் உள்ள பேருந்து நிலையத்தில் வரும் 31 ஆம் திகதி பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் ஒலிபரப்பப்படவேண்டிய பாடல்கள் அடங்கிய சிடிக்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## ஐ.நா சவால்...

யும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகி வருவதாக இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், அடுத்த சில வாரங்களில் சர்வதேசம் மேலும் வலுவான நிலைப்பாட்டை எடுக்கக் கூடும் என்றும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வு விரைவில் தொடங்க உள்ளது. அமர்வில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். வெளியுறவுத்துறை அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பிற அரச நிறுவனங்களிடையே தொடர்புடைய அனைத்து விடயங்களையும் நாங்கள் விவாதிப்போம்.

இலங்கை தொடர்பான சர்வதேச மற்றும் உள்ளூர் அறிக்கைகளை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம். குறிப்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான நிர்வாகம் குறித்து பல பிரிவுகள் கவலைகளை எழுப்பியுள்ளன. அடுத்த சில மாதங்களில் வெளிநாட்டு நிறுவனங்கள் 'எங்களுக்கு எதிராக வலுவான நிலைப்பாட்டை எடுக்கக்கூடும்.

மேலும் ஜெனிவாவில் உள்ள 23


### வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், நல்லூரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அலுவலகமொன்றுக்கு கம்பியூட்டர், ரைப் செற்றிங் செய்யக்கூடிய பெண் வேலையாட்கள் தேவை.
T.P- 0777892028
Email- navamohanv@gmail.com (1586)

### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில்புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்
தொடர்புகளுக்கு: 076 707 0069 M.Suren (1588)

### வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-8637)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

### பிரான்ஸ் மற்றும் கனடாவில்

நடைபெறும் எங்களது 2ஆவது தமிழ் சினிமா படப்பிடிப்பிற்கு கலந்து கொள்ள விரும்பும் ஆண்கள் மற்றும் பெண்கள் தேவை.
தொடர்புகளுக்கு (1584)
0766841113, 00919626882987

### பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் வைத்தியரின் வீட்டில் தங்கியிருந்து குழந்தையைப் பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை.
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு:
077 248 7789
077 432 6401 (1589)

### விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS (C-8115)
0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
V2 TRAVELS

### காணி விற்பனைக்கு

பிறவுண் றோட்டில் வலம்புரி அருகில் 1 1/2 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. (1582)
தொடர்புகளுக்கு:
0777892028, 0777452501

### தரம் 6 - 11
### வரலாறு
வினாவிடை

- இலகு கற்றல் நுட்பம்
- தவணை வினாத்தாள்கள்

ஆசிரியர்:- சி.சூரியதாசன்
இலங்கையின் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும் (1585)
தொடர்புகளுக்கு:- 0770616129

### SALE SALE SALE
ஏசியன் தளபாட நிலையத்தின்
மாபெரும் வருட இறுதி
### மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| கண்ணாடி அலுமாரி 6X3 | 13900/= | 11,150/= |
| மர அலுமாரி 6X3 | 27800/= | 18,900/= |
| மெத்தை (Double Layers) 6X3 | 3750/= | 3100/= |
| மெத்தை (Double Layers) 6X4 | 4890/= | 4050/= |
| பிரம்பு செற் + 1 ரீப்போ | 17000/= | 15350/= |
| Sofa Set (3+1+1) | 39000/= | 33000/= |
| Stand Fan - innovex | 4500/= | 3740/= |
| T.V - 32" Panasonic + Free Panasonic DVD Player | 32000/= | 28000/= |

மேலும் பல பொருட்கள் மலிவு விற்பனையில்...
076 821 9416, 076 821 9418
facebook - Asian Furniture Jaffna. (C-8647)
இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்

### சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை



லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8614)

### FLC FRENCH LANGUAGE CENTRE



Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses (C-8555)
V. Jegan(Trained in France) DELF A1,A2,B1,B2
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் :20.01.20 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

19.12.2019ஆம் திகதி பரந்தன் சந்திக்கும் கரடிப்போக்கு சந்திக்கும் இடையில் ஒரு தொகை பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான சரியான அடையாளத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்
தொடர்புகளுக்கு: (C-8652)
0770691643
0777373133

### விற்பனைக்கு / குத்தகைக்கு

2ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் (பருத்தித்துறை மத்திய சந்தைக்கு பின்புறமாக) 2 1/2 பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு கடையுடன் கூடிய பேக்கரி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும்.

நிறுவனமாகவும் அல்லது பேக்கரியாகவும் பாவிக்கும் வகையில் உள்ளது. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-8644)
தொடர்புகளுக்கு:
077 421 5879


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.